
# Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு 13 தொகுதி 3 ஜூலை - செப்டம்பர் 2024

**R 5539**

## கிறிஸ்தவனுடைய பலத்தின் துருகம்

## THE CHRISTIAN’S TOWER OF STRENGTH

**“கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் என்ன செய்வான் என்று சொல்லலாமே”—எபி 13:6.**

உலகத்தில் கிறிஸ்தவனுடைய ஸ்தானம் விசித்திரமான ஒன்று. அவனைப்போல சுதந்திரமாயும், தைரியமாயும் வேறு யாராலும் இருக்கமுடியாது. ஆயினும் உண்மை தேவனுடைய பிள்ளை தன்னிறைவு பெற்றவர் அல்ல, எந்த வெளிப்புற உதவியையும் சாராதவராய் இருக்கிறார். அவன் பெருமையுள்ளவனாக இராமல், தாழ்மையுள்ள சிந்தையோடிருக்கவேண்டும் என்றும், தன்னைப்பற்றிய தனது சக்தியற்ற தன்மையையும், தேவனுடைய தேவையையும் உணர்ந்திருக்கவேண்டும் என்றும் கர்த்தருடைய வசனத்தால் அவன் அறிவுறுத்தப்படுகிறான். மெய்யாகவே அவன் தாழ்மையின் சிந்தையுடையவனாக இராவிடில், அவனால் கர்த்தரைப் பிரியப்படுத்தமுடியாது. ஆனால் அதே சமயத்தில், அவன் முழு தைரியமும், நம்பிக்கையும் உடையவனுமாய் இருக்கவேண்டும். இப்பிரபஞ்சத்திலேயே எந்த வல்லமையும் நம் தேவனோடு ஈடுகொடுக்கமுடியாது, அவரே தன் பிள்ளைகளுக்கு கேடகமும், ஒத்தாசையும் செய்வதாக அறிவித்திருக்கிறார். அவரிடத்தில் தங்கள் நம்பிக்கையை வைப்பவர்களுக்கு அவர் பலமான துருகமாய் உள்ளார்.

நாம் தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறபடியாலும், அந்த அழைப்புக்கு நாம் பதிலளித்திருக்கிறதினாலும், நம் சரீரங்களில் அவரை மகிமைப்படுத்தத் தேடுகிறதினாலும் , நாம் கிறிஸ்துவில் நிலைத்திருந்து அவரது வார்த்தை நம்மில் நிலைத்திருக்கும்பொழுது, ஆறு இக்கட்டுக்களுக்கு நீங்கலாக்கி, ஏழாவதிலும் அவர் நம்மைக் கைவிடுவதில்லை. இதனால் எந்த மனிதன் நமக்கு என்னசெய்ய முடியும் என்று நாம் அஞ்சத் தேவையில்லை. தேவனிடத்தில் உறுதியான நம்பிக்கையும், தைரியமும் வைக்கும்படி நமக்கு புத்திமதி கூறும் அப்.பவுல், தைரியமுள்ள விசுவாசத்திற்கு ஒரு நேரிய உதாரணமாயிருக்கிறார். விசுவாசத்தின் நிச்சயத்தன்மைக்கும் மனித பயம் இல்லாதிருப்பதற்குமான மிகுதியான காரணத்தை நாம் ஏன் பெற்றிருக்கிறோம் என்று அவர் நமக்குக் கூறுகிறார்; உங்கள் உரையாடல்கள்(நடத்தை, ஜீவிக்கும் விதம்) பொருளாசையின்றி இருப்பதாக. “உள்ளதே போதும் என்றிருங்கள். ஏனெனில் நான் உன்னைக் கைவிடமாட்டேன்; உன்னைவிட்டு விலகமாட்டேன் என்று கடவுளே கூறியிருக்கிறார். இதனால், நாம் துணிவோடு; ஆண்டவரே எனக்குத் துணை, நான் அஞ்சமாட்டேன், மனிதர் எனக்கு எதிராக என்ன செய்யமுடியும் ? என்று கூறலாம்”(எபி 13:5,6) என்று சொல்கிறார்.

**உண்மை விசுவாசம் அனுமானம் அல்ல**

“கர்த்தர் எனக்குச் சகாயர், ஆதலால் என் வீடு எரிக்கப்படவோ அல்லது கொள்ளையர்கள் என் உடைமைகளைத் திருடவோ அல்லது சேதப்படுத்தவோ அவர் விடமாட்டார். கர்த்தர் என்னையும் என்னுடையவைகளையும் காவல் காப்பதால் இரவுவேளையில் என் கதவுகளை நான் தாழ்ப்பாளிடுவதில்லை” என்று நாம் சொல்லக்கூடாது. இது தெளிந்தபுத்தியின் ஆவியாக இருக்காது. இது உண்மை விசுவாசமுமல்ல. மாறாக துணிகரமானது. இவ்வகையான இழப்புக்களை தடுப்பதற்கு நாம் நியாயமான எல்லாவித முன்னெச்சரிக்கைகளையும் எடுக்கவேண்டும். நம் சொந்த அலட்சியங்கள் மற்றும் திறமையின்மையிலிருந்து நம்மைப் பாதுகாக்க, கர்த்தரிடமிருந்து அவசியமற்ற அற்புதங்களை எதிர்பார்க்காமல், நம் சொந்த பாதுகாப்பிற்காக நம் வல்லமை அனைத்தையும் பிரயோகிக்கும்படி அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலைகளின்கீழ், சிரமங்களிலும் இழப்புக்களிலும் ஈடுபடும்படி அவர் நம்மை அனுமதிப்பதனால் தேவையான பாடத்தைக் கற்கிறோம். கர்த்தர் நம்மிடத்தில் ஒப்படைத்திருக்கிறவைகளுக்கு நாம் உக்கிராணக்காரர்களாக இருந்து, எவையெல்லாம் நம் பராமரிப்பின்கீழ் முறையாக உள்ளதோ, அதை அவருக்குரியதென்று எண்ணி, பராமரிக்கும்படி அவர் நம்மிடம்

## இம்மாத வெளியீட்டில்


| | |
|---|---|
| .. கிறிஸ்தவனுடைய பலத்தின் துருகம்... | ... 1 |
| .. மரியாளின் சுகந்த நறுமண திரவியம் | ... 3 |
| .. யேகோவா தேவனின் பிரசன்னம் ... | ... 5 |
| .. சபைக்கான அபிஷேகம் | ... 10 |
| .. கெத்செமனேயின் வேதனை ஏன் ? | ... 13 |



*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

எதிர்பார்க்கிறார். நெருப்பு ஏற்படும் சமயத்தில், கையில் வாளி மற்றும் தண்ணீர் தயாராக நாம் வைத்திருக்கவேண்டும். நம் கதவுகள் மற்றும் ஜன்னல்கள்மீது முறையான இணைப்பான்களை(காற்றில் அடிபடாதபடிக்கு முற்காலங்களில் பயன்படுத்துவர்) நாம் வைத்திருக்கவேண்டும். நம் சொந்தக்கடமையை செய்துமுடித்தபிறகு, எல்லாம் நமக்கு நன்றாக நடக்கும் என்பதை அறிந்து, கர்த்தரின் கையில் நம்மை முழுமையாக விட்டுவிடவேண்டும்.

பேரிடராய்த் தோன்றுவதை நமக்கு வரும்படி கர்த்தர் அனுமதிப்பாரானால், அனுபவத்தின்மூலம் நாம் அதை முறையாக அணுகுவோமானால், அது நம் நன்மைக்கேதுவாகவே இருக்கும் என்று நாம் உறுதியாக இளைப்பாறலாம். நம் பங்கை செய்தபிறகு, நமக்கு ஏற்படும் விளைவுகள் அனைத்திலும் அவரை நம்பவேண்டும், அவரது சிறந்தவழியில் நம்மீது அக்கறை காண்பிப்பார் என்பதில் சந்தேகம் இருக்கக்கூடாது. அவரது பராமரிப்பிலிருந்து நாம் நீங்காமலும், நம் சொந்த விருப்பங்களை நிர்வகிக்கத் தேடாமலும் இருந்தால், புதுசிருஷ்டியின் மேலான நலன்களுக்காக அவர் பார்த்து, இம்மைக்குரிய வழிகளில் எவ்வித உதவியையும் கர்த்தர் நமக்குக் கொடுப்பார். அப்படி தவறு நடந்தாலும், எங்கு நாம் மனப்பூர்வமாக தவறு செய்திருக்கிறோம், எங்கு நம் சுயபுத்தியின்மேல் சாய்ந்திருந்தோம் என்று நம் கண்கள் திறக்கப்படுவதினால் நம் தவறான போக்கைக் கண்டு, கர்த்தரிடத்திலான உண்மைப்பற்றை முழுமையாக புதுப்பித்துக்கொள்வோமானால், நாம் ஈடுபட்டிருந்த சிரமங்கள் நிஜமான ஆசீர்வாதமே என நிரூபணமாகும். நமக்கு நாமே வழிகாட்ட நம் சொந்த இயலாமையை நாம் உணரச்செய்து, தேவனிடத்தில் முழுமையாய் நம்மை திரும்பச்செய்யும்.

**தீயவன் அவனைத் தொடான்**

நம் பிதாவின் நிலையான பராமரிப்பின் விஷயங்களாக நம் உயரிய, நிஜமான நலன்கள் உள்ளன . கர்த்தருக்கு வெகு அருகாமையில் நம்மைக் காத்துக்கொள்வோமானால், விழுந்துபோன தூதர்களின் வல்லமையிலிருந்து நாம் பாதுகாக்கப்படுவோம், அவர்களுக்கு அனுமதிக்கப்படுமானால் நம்மை சுற்றிலும் வலைவிரித்து வீழ்த்துவர். நாம் விழிப்பாயிருந்து நம் ஆடைகளை வெண்மையாய் காத்துக்கொள்வோமானால், அவைகளால், உண்மையாகவே நமக்கு தீங்கிழைக்கமுடியாது. புது சிருஷ்டியின் நலன்களைப் பொருத்தவரையில், விசுவாசத்தில் குறைவுபடும்போது மட்டுமே அவர்களுடைய அதிகாரங்களுக்குள் நம்மை உட்படுத்தும். நம் ஆண்டவரின் விஷயத்தில் நடந்ததுபோல், நம் மீட்பு மற்றும் உயர்த்தப்படுதல் ஆகிய நம் உயர்ந்த நன்மைகளுக்காக கர்த்தர் அனுமதித்தாலன்றி, அவைகள் எவ்வழியிலாவது நம் சரீரங்களுக்கு தீங்கு விளைவிக்கவோ அல்லது ஏதாவதொரு கேடு வருவிக்கவோ முடியாது.

ஆகவே "தீயோன் தொடாதபடிக்கு" நம்மைக் காத்துக்கொள்வோம். நாம் இருளின் வல்லமைகளால் வஞ்சிக்கப்பட்ட ஊழியர்களது பல்வேறு தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளோம். நம் நற்பெயரின்மீதோ, நம் புகழின்மீதோ, நம் சரீரங்கள் மீதோ அல்லது சட்டப்படியாக தாக்குதல்கள் அதிகமாகவோ குறைவாகவோ இருக்கக்கூடும். அவர்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரங்கள் மூலமாக நாம் குறிப்பிட்டளவு மனுஷருக்கு கீழ்ப்படுத்தப்படுகிறோம். ஆயினும் கர்த்தரால் அனுமதிக்கப்படாவிடில், நம்மைத் தொடுவதற்கு நம் கடுமையான எதிரிகள் பலமில்லாதிருக்கிறார்கள். நாம் செய்திருக்கிற உடன்படிக்கையின்படி, கர்த்தரிடத்தில் நாம் எடுத்துக்கொண்ட பொருத்தனைகளுக்கு உண்மையாய் நிலைத்திருந்தோமானால், மாபெரும் எதிராளியினால் நம்மைத் தொட முடியாது. நம் சொந்த அவிசுவாசத்தாலன்றி புதுசிருஷ்டிகளாகிய நம்மை விரோதியானவன் ஒருபோதும் தொட முடியாது.

**நம் தேவனை மட்டுமே நாம் சேவிப்போம்**

யோவான் ஸ்நானகன் சிறைப்படுத்தப்படவும், இறுதியில் சிரச்சேதம் பண்ணப்படவும் அவர் அனுமதித்ததுபோல், இயேசு கைதுசெய்யப்படவும் சிலுவையிலறையப்படவும் அவர் அனுமதித்ததுபோல், கடந்த காலங்களில் அவரது பரிசுத்தவான்களில் அநேகர் கொடுமைப்படுத்தப்படவும் கொல்லப்படவும் அவர் அனுமதித்ததுபோல், நாம் துன்புற அனுமதிப்பது தேவசித்தமாக இருக்கலாம். ஆனால் மனுஷன் நமக்கு என்ன செய்வான் என்று நாம் பயப்படத்தேவையில்லை. நாம் யாருடையவர்களோ, யாரை நாம் சேவிக்கிறோமோ அந்த தேவன் எப்பொழுதும் நம்மோடு நிலையாக இருப்பார் என்பதை அறிந்திருக்கிறோம். அவர் நம்முள் இருந்து, நமக்கான அவரது சொந்த மகிமையான நோக்கங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவார்.

சாத்தியமிருக்குமானால், நாம் மனுஷரைப் பிரியப்படுத்துவதில் நிச்சயமாகவே மகிழ்ச்சியடைவோம். ஆனால் தேவனைப் பிரியப்படுத்துவதா அல்லது மனுஷனைப் பிரியப்படுத்துவதா என்ற கேள்வி எங்கு எழுந்தாலும், மூன்று எபிரேய வாலிபர்கள் பாபிலோனின் ராஜாவினிடத்தில் கூறியதுபோல் ; "நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களை விடுவிக்க வல்லவராயிருக்கிறார்.. விடுவியாமற்போனாலும், ராஜாவே, நாங்கள் உங்கள் தேவர்களையோ, நீங்கள் ஏற்படுத்தியிருக்கிற பொன்னாலான சிலையையோ வழிபடவும் சேவிக்கவும் மாட்டோம் என்கிறது இராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது" என்று நாமும் கூறுவோமாக. யேகோவா தேவனின் கட்டளைக்கும், தெய்வீக சித்தத்துக்கும் எதிராக நாங்கள் எதுவும் செய்யமாட்டோம். நாங்கள் எங்கள் தேவனை மட்டுமே சேவிப்போம்!

இயேசுவின் நாமத்தில் இனியும் பேசக்கூடாது என்று அப்போஸ்தலர்கள் பேதுரு மற்றும் யோவானுக்கு யூத ஆலோசனை சங்கம் கட்டளையிட்டபோது(அப்4:13–20), அவர்களுடைய பதில் ; "தேவனுக்கு செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே"என்றார்கள். நம் கர்த்தர் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட அந்த இரவில், யூதேயாவின் ரோம ஆளுநராகிய பொந்தியுபிலாத்து அவரிடத்தில் கூறியதாவது ; "உன்னைச் சிலுவையிலறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண

எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான்''. அதற்கு இயேசு பதிலுரைத்ததாவது ; ''பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால் என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது'' என்றார். அவ்வாறே குருவின் பாதச்சுவடுகளைப் பின்பற்றும் அனைவருடனும் இருக்கிறது. தேவனுடைய கிருபை போதுமானதாயிருக்கும். பரலோகத்திலுள்ள நம் பிதாவின் மகிமைக்காகவும், நம் சொந்த உயரிய நலனுக்காகவும், அவரால் அனுமதிக்கப்பட்டாலொழிய நம் தலைகளிலுள்ள ஒரு தலைமுடியையும் சேதப்படுத்த மனுஷன் வல்லமையின்றி இருக்கிறான்.

**விசுவாசத்தில் பிறந்த தைரியம்**

உறுதியுள்ள இருதயத்துக்கே கலக்கத்தை வருவிக்கும் கடினமான சூழ்நிலைகளில், கர்த்தருடைய தாழ்மையுள்ள சிறியவர்களின் அமைதலைக்கண்டு, உலகம் பெரும்பாலும் வியக்கின்றது. பரலோக ராஜாவின் பிரதிநிதிகளாக நம் தேவனை மகிமைப்படுத்தவும், அவரது கிருபையை பெரியதாக்கவும் நம் வாழ்வில் பின்பற்றும் வழியானது, கிறிஸ்தவர்களாக நமக்கு வரும் சோதனைகள் மற்றும் இன்னல்களை ஞானமாயும் தைரியத்துடனும் சந்திக்க ஆற்றலளிக்கிறது. மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்குமாதலால், அதை ஜெயங்கொள்ளவும், நம் உபத்திரவங்கள் அனைத்தையும் மகிழ்ச்சியாக எண்ணவும், அவைகளை சந்தோஷத்தின் ஆவியில் சந்திக்கவும், நம் சித்தத்தை விட்டுவிட்டு அவரது சித்தத்தையே அடைந்திருந்து, நம் இருதயங்கள் கர்த்தரோடு இணக்கமாய் இருக்கவேண்டியது அவசியமாகிறது. நம் சொந்த பலத்தால் இதை நம்மால் நிறைவேற்றமுடியாது, மாறாக தேவனுடைய பலத்தால் மட்டுமே முடியும். பலவீனமான அழிவுக்குரியதற்கு பயப்படாமல், யேகோவா தேவனுக்கே பயப்படும்படி நாம் கற்பிக்கப்படுகிறோம். நீதிமான்கள் சிங்கத்தைப்போல் தைரியமாயும், புறாவைப்போல் மென்மையும், ஆட்டைப்போல் சாந்தமும் உடையோராய் இருப்பர். இந்த தைரியம், மென்மை மற்றும் சாந்தம் ஆகிய இந்த விநோதமான கலப்பு, ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய தனித்தன்மையாக இருக்கவேண்டும்.

-------------------

**R 5540**

## மரியாளின் சுகந்த நறுமண திரவியம்

## MARY'S SWEET PERFUME

**ஆதார வசனங்கள் : மாற்கு 14:1–11.**

**"அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்"– மாற்கு 14:8.**

இயேசுவின் ஊழியக்காலத்தின் இறுதி ஐந்து நாட்கள் முழு ஆர்வமிக்கதாயிருந்தன. நம் கர்த்தரின் சிலுவை மரணத்துக்கு சற்று முன்னதாக, யூதருடைய ஓய்வு நாள் முடிவடையும்போது, நம் பாடத்தில் விசேஷமாகக் குறிப்பிடப்படுகிற சம்பவம் நிகழ்ந்தது. இயேசுவும் அவருடைய சீஷர்களும் பஸ்கா பண்டிகைக்காக வந்திருந்தார்கள், இங்கு தாம் சிலுவையிலறையப்படவேண்டும் என்று சீஷர்களிடத்தில் கூறினார். ஆனால் அவர் ஒருவகை உருவக பாஷையில் பேசினதாக அவர்கள் எண்ணினர். மெய்யாகவே இயேசுவின் ஊழியத்தின் போது, எந்தநேரத்திலும் அவர் சிலுவையில் அறையப்படுவதற்கான வாய்ப்புக்கள், அது நிகழ்ந்ததைவிட குறைவாக இருந்ததாகத் தெரியவில்லை. அவருடைய பிரசங்கமும், அவரது சீஷர்களில் முதலாவதாயிருந்த 12 பேர் மற்றும், அதனையடுத்து 70 பேருடைய பிரசங்கமும், யூதர்கள் அனைவரிடமும், குறிப்பாக கலிலேயாவில் கணிசமான ஆர்வத்தை எழுப்பியிருந்தது.

ஒரு வாரம் நீடிக்கும் இந்தப் பண்டிகையைக் கொண்டாடுவதற்கென்று எருசலேமில் பெரும் திரளான ஜனங்கள் கூடியிருந்தனர். அவர்களில் ஆயிரக்கணக்கானோர் இயேசுவைக் குறித்து அறிந்திருந்தனர், அவர்களில் அநேகர், தங்கள் நோய்கள் குணமாக்கப்பட்டதில் அவரது இரக்கத்தைப் பெற்றிருந்தனர். சற்று நேரத்திற்கு முன்பு கணிசமான ஜனங்கள் இயேசுவை ராஜாவாக அறிவிப்பதன் தகுதியைப்பற்றி விவாதித்தனர். இப்பாடத்தில் கூறப்பட்ட சம்பவம் நடந்த ஒரு நாளைக்குப்பிறகு, அவர் கோவேறு கழுதையின்மீது உட்கார்ந்து பவனிவந்தபோது, திரளான ஜனங்களில் சிலர் அவருக்கு முன்சென்றும், சிலர் அவரைப் பின்தொடர்ந்தும் சென்று அவரை ராஜா என்று போற்றினர். ''யேகோவா தேவனின் நாமத்தினால் வருகிற தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!'' என்று சொல்லி ஆர்ப்பரித்தனர்.

ஆனால் இந்தக் கூட்டத்தார், அந்நாளிலிருந்த பெரிய போதகர்களுடைய கரங்களில் குழந்தைகளைப்போல் இருந்ததை எஜமான் அறிந்திருந்தார். அவருக்கெதிராக பிரதான ஆசாரியர்கள், சதுசேயர் மற்றும் பரிசேயர்கள் மத்தியில் கொலைவெறி இருந்ததை அவர் அறிந்திருந்தார். ஆம், அவர்கள் எந்தக் காரணமுமின்றி, அதாவது நீதியான காரணமில்லாமல், அவரைப் பகைத்தார்கள் என்று எழுதியிருக்கிறது (யோவான் 15:25). ஆனால் அவர்களுடைய சொந்த கண்ணோட்டத்தின்படி, அவரைப் பகைக்க போதுமான காரணம் உடையோராயிருந்தனர்.

**மத போதகர்களுடைய மனப்பான்மை**

யூத தேசம் தன் சுயாதீனத்தை நீண்டகாலத்துக்கு முன்பே இழந்திருந்தபோதிலும், அதை மீண்டும் ஜெயிக்கும் வாய்ப்பை ஒருபோதும் அடைந்திருக்கவில்லை. ஆயினும் சாலமோனின் நாட்களில் அவர்களுடைய அரசியல் வாய்ப்புக்கள் மிகவும் தயவுள்ளதாகக் காணப்பட்டதைப்போல், ஒருமுறைகூட அடைந்திருக்கவில்லை. ரோமானிய பேரரசர்கள் இந்த ஆசாரியர்களோடும், சதுசேயர்களோடும், மதத்தலைவர்களோடும் கூட்டுறவில் இருக்க தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார்கள். பேரரசர்கள் ஆளுகை செய்ய மாத்திரமே விரும்பினர், மேலும் மற்றெந்த வழியைக் காட்டிலும் இந்த மதத் தலைவர்கள் மூலமாகவே அதிக செல்வாக்கை செலுத்தமுடியும் என்பதையும் உணர்ந்திருந்தனர்.

இவ்வாறு பெரிய மதபோதகர்கள், தங்களை ஜனங்களுக்கான ஆதரவாளர்கள் என்று உணர்ந்தனர். இயேசுவின் போதனைகளால் அதிக அறியாமையிலுள்ள யூதர்கள் மீதான அவர்களின் பிடி பலவீனமானதை அவர்கள் உணர்ந்தனர். தேவனுடைய பிரதிநிதிகள் என்று உரிமை

பாராட்டுவதிலும் ரோமானிய அரசோடு இடைத்தரகர்களாக இருப்பதிலும் அவர்கள் திருப்தியடைந்தோராக உணர்ந்ததால், இயேசுவையும் அவரது போதனைகளைக் குறித்தும் விசாரிப்பதை தகுதியுடையதாக அவர்கள் எண்ணவில்லை. உண்மையாகவே அனைத்தும் நல்லவிதமாக நடைபெறுவதாக அவர்களுடைய பார்வை இருந்தது. அவர்களுடைய திட்டங்கள் குறுக்கிடப்படாதிருப்பதைத் தவிர, வேறெதிலும் அவர்கள் மேலான விருப்பங்கொள்ளவில்லை.

அவர்களில் அநேகர், தேவனிடத்திலும் எதிர்கால ஜீவியத்தைக் குறித்தும் எல்லா விசுவாசத்தையும் இழந்திருந்தனர். மற்றவர்களோ, தேவனிலும் அவரது வாக்களிக்கப்பட்ட ராஜ்யத்திலுமான விசுவாசத்தைத் தக்கவைத்திருந்து, ரோமப் பேரரசோடு இணைந்திருப்பதே தங்கள் தேசம் பலப்படுவதற்கும், மேசியாவுக்குரிய மகிமைகளுக்கு ஆயத்தம் பண்ணவும் சிறந்த வழியாயிருக்கும் என்று எண்ணினர். இந்தக் கண்ணோட்டத்தின்படி, இயேசு சமாதானத்தைக் குலைக்கிறவராயிருந்தார். அவர் அவர்களின் குழுவைச் சார்ந்தவர் அல்லர். அவருடைய நடத்தையும் அவருடைய போதனைகளும் அவர்களைக் கண்டித்தது, மேலும் ஜனங்களுடனான அவர்களது செல்வாக்கை இழக்கச்செய்தது.

இயேசு பண்டிகைக்கு வந்திருக்கிறார் என்பதை மதபோதகர்கள் கேள்வியுற்றனர். அவரை எப்படி புத்திசாலித்தனமாக கையாளமுடியும் என்றும், எப்படி கொல்லலாம், எவ்விதத்தில் அகற்றலாம் என்றும் விவாதித்தனர். அந்தக் காரணத்தைத் தவறாகப் புரிந்துகொண்டதினால் அவருடைய அழிவு, பிதாவின் நிமித்தமாக நன்மைக்கேதுவாக இருக்கும் என்று அவர்கள் ஒருமனதாக நம்பியதாகக் காணப்பட்டது. மற்றுமொரு வேதவசனம் நமக்குக் கூறுவது, பிரதான ஆசாரியனாகிய காய்பா, ஒரு தேசமே அழிக்கப்படுவதற்கு பதிலாக ஒரு மனிதன் மரிப்பது நலமாயிருக்கும் என்று அறிவித்திருந்தான்(யோவான் **11:49–52**). இயேசுவின் போதனைகள் தொடர அனுமதிக்கப்படுமானால், மேசியாவின் ராஜ்யத்தின் மீதான விசுவாசத்தில் ஜனங்கள் நிச்சயம் விழிப்புணர்வடைவர் என்று அவர்கள் கற்பனை செய்தார்கள். இயேசுவை ஒரு ஏமாற்றுக்காரராக அவர்கள் எண்ணினாலும், அவரது போதனைகள் ஒருவித வெறித்தனமான எழுச்சியைத் தூண்டும் என்று பயப்பட்டார்கள்.

மத போதகர்கள் அவர்களுடைய இருதயங்களில் கொலைசெய்திருந்தார்கள். இயேசுவின்மீது விசுவாசம் வைக்கத் துவங்கியிருந்தவர்களைத் தூண்டிவிடக்கூடாது என்பதற்காக, எப்படி கொலையை அவர்கள் நிறைவேற்றி, ஜனங்களை வஞ்சிப்பது என்பது வெறும் கேள்வியாகவே இருந்தது. அவர் திரளான ஜனங்களால் சூழப்பட்டிருப்பார், அவர்களில் சிலர் அவரை பெரிய தீர்க்கதரிசி என்று எண்ணியிருந்தனர், வேறுசிலரோ அவரை மேசியா என்று கருதியிருந்தனர். ஆகவே அவரைக் கொலைசெய்ய பண்டிகைக்காலம் தயவற்றதாக இருக்கிறது என்று அவர்கள் முடிவுக்கு வந்தனர். யூதாஸ் அந்த மதத்தலைவர்களிடத்தில் தனித்து சென்றபோது, அவர்களுடைய மனப்பான்மை அவ்வாறே இருந்தது. தான் இயேசுவின் அசைவுகளோடு தொடர்பில் இருப்பதாகவும், திரளான ஜனங்கள் அவரோடு இல்லாதநேரத்தில் இயேசுவை சிறைப்பிடிப்பதற்கான பொருத்தமான நேரத்தை அவர்களுக்குத் தெரிவிக்க தனக்குக் குறிப்பிட்ட தொகை தரவேண்டும் என்ற யோசனையையும் யூதாஸ் முன்வைத்தான். அவனுடைய திட்டம் இறுதியாக முடிவுசெய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**பண்டிகை – அபிஷேகம்**

இறந்து மூன்று நாட்களுக்குப்பிறகு இயேசு எழுப்பிய அந்த லாசருவின் மரியாதைக்குரிய விருந்தினர்களாக இயேசுவும் அவருடைய சீஷர்களும் காணப்பட்டனர். குஷ்டரோகியாயிருந்த சீமோனின் வீட்டில் அது நடைபெற்றது (அவர் அநேகமாக மரித்துவிட்டார்), இயேசு கௌரவ விருந்தினராக வந்திருந்தார், அவரது சீஷர்களும் அவரோடு பகிர்ந்துகொண்டனர். லாசருவுடன் மார்த்தாளும் மரியாளும் உபசரிப்பவர்களாக இருந்தனர். இரவு விருந்து நடைபெற்றுக்கொண்டிருந்தவேளையில், மரியாள் மிகவும் விலையேறப்பெற்ற நறுமணத்தைல குப்பியுடன் நுழைந்தாள். அத்தைலத்தை அவள் இயேசுவின் தலைமீது ஊற்றினாள், அவரது பாதத்தின்மீதும் அதே நறுமணத் தைலத்தை சிறிதளவு ஊற்றியதாக வேறு ஒரு வேத வசனம் கூறுகிறது.

அவ்வீடு நறுமணத்தால் நிறைந்திருந்தது, இயேசு கனப்படுத்தப்பட்டார். அப்போது, “இப்படி வீணாய்ச் செலவழிப்பானேன்” என்ற முறுமுறுப்பின் சத்தம் வெளிப்பட்டது. இந்த முறுமுறுப்பாளர்களது தலைவனாக யூதாஸ் இருந்ததாக, பரிசுத்த யோவான் நமக்குக் கூறுகிறார். அவரது பேச்சால் பலர் தாக்கமடைந்தனர் என்பது தெளிவாகிறது. யூதாஸ் ஏழைகளின் நண்பனாகக் காட்டிக்கொண்டான், அவனுடைய வருத்தங்கள் சுயநலமானதோ அல்லது தனிப்பட்டவையோ அல்ல, மாறாக பிறருக்கு என்ன நன்மை செய்திருக்கமுடியும் என்று தான் எண்ணுவதாக தன்னை வெளிப்படுத்தினான்.

இந்தப் பேச்சு பாசாங்குத்தனமானது என்று அப்போஸ்தலர்கள் பிற்பாடு அறிந்துகொண்டனர். அந்த சந்தர்ப்பத்தில் உபசரிப்பவர்களில் ஒருவராயிருந்தவரை வெளிப்படையாக அவமரியாதை செய்த யூதாஸின் கோபத்தை அந்நேரத்தில் இயேசு புரிந்துகொண்டார். இப்பணத்தை தனக்கென அடைவதில் தோல்வியுற்றதே யூதாஸின் கோபத்துக்குக் காரணம் என்று அப்.யோவான் நமக்குக் கூறுகிறார். சீஷர்களது சிறு கூட்டத்திற்கு அவனே பொருளாளராக இருந்து, பணப்பையைச் சுமந்துசென்றான். அவன் ஒரு திருடன் என்று அவர்கள் பிற்பாடு அறிந்துகொண்டனர். அவன் தனிப்பட்டமுறையில் தனக்காக சேமித்திருந்தான்(யோவா**12: 6**). மேலும் தரித்திரருக்காக விண்ணப்பித்த அதே சமயத்தில், நிதியை தனக்குத்தானே திருப்பிக்கொள்ள யூதாஸ் முயன்றான்.

**மரியாளுடைய அர்ப்பணிப்பின் அளவு**

அந்த நறுமணத் தைலத்தின் மதிப்பு **300** பென்ஸ் என்ற யூதாஸின் அறிவிப்பு, ஒருவேளை உச்சபட்ச மதிப்பீடாக இருக்காது. **300** பென்ஸ் என்பது ஏறக்குறைய **6**டாலர்களாக இருக்கும். வெள்ளி பணத்தின் விலைமதிப்பு **16**சென்ட்டாக இருந்த அச்சமயத்தில், இது ஒரு நாள் கூலியினைக்

குறிப்பிடுகிறது. அப்படியானால் 300 பணம் என்பது நடைமுறையில், ஒரு வருடத்திற்குரிய கூலியைக் குறிக்கும். ரோஜா இதழிலிருந்து பெறப்படும் நறுமணப்பொருளுக்கு, அவுன்ஸ் ஒன்றுக்கு 16 டாலர்கள், ஒரு சிலசமயத்தில் அதற்கும் மேலாக விலைகொடுக்கப்படுகிறது. கடந்தகால நறுமண தைலங்களுக்கு அபரிதமான தொகை கொடுக்கப்பட்டதை வரலாறு நமக்குக் கூறுகின்றது.

கடந்தகாலத்தோடு ஒப்பிடுகையில், இன்றைய நாளில், நறுமண திரவியங்கள் முக்கியத்துவமற்று, மலிவான விலையில் தயாரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. ஆனால் முற்காலங்களில் வாழ்ந்தோர் நறுமண திரவியங்களில் தீவிர விருப்பமுடையோராயிருந்தனர். அவற்றை தாராளமாகப் பயன்படுத்துவது நாம் ஆராய்ந்துவரும் பாடத்திலும் இது தேவபக்திக்குரிய ஆழமான மதிப்பைக் குறியீடாகக் காண்பிக்கிறது. தன் சகோதரனை கல்லறையிலிருந்து எழுப்பின, தான் மிகவும் உயர்வாக மதிக்கிற நண்பராகிய இயேசு, வேறு யாரும் அல்ல, அவரே யேகோவா தேவனின் குமாரனும் பிரதிநிதியுமாயிருக்கிற மேசியா என்பதை மரியாள் உணர்ந்தாள். யேகோவா தேவனிடத்தில் அவள் வைத்திருந்த தேவபக்தியை அவருடைய உயர்ந்த பிரதிநிதியாக இருந்த இயேசுவிடத்திலும் அவள் வெளிப்படுத்த முயன்றாள்.

கடுமையான விமர்சனத்தை அவள் கேட்டபொழுது, ஏழை மரியாள் நசுக்கப்பட்டதாக உணர்ந்திருக்கவேண்டும். ஆனால் இயேசுவோ அவளுக்கு ஆதரவாக, "அவளை விட்டுவிடுங்கள், ஏன் அவளைத் தொந்தரவுபடுத்துகிறீர்கள் ? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள். தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள், உங்களுக்கு மனதுண்டாகும்போதெல்லாம் நீங்கள் அவர்களுக்கு நன்மை செய்யலாம். நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்" (மாற்கு 14:7,8)என்று கூறினார்.

எஜமானின் அங்கீகாரம் நிச்சயமாய் மரியாளைத் தேற்றினது. கணிசமான அளவு சுயத்தை வெறுத்தலாகவும், குறிப்பிடத்தக்க விலையையும் கொடுத்த அவளுடைய அன்பின் அர்ப்பணிப்பின் இந்த சம்பவம், கர்த்தருடைய சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் இடமெல்லாம் அவளை நினைவுகூறும்படி சொல்லப்பட்டுவருகிறது. அவளை கனப்படுத்துவதற்காக மட்டுமல்ல, விஷேசமாக மற்ற தேவபிள்ளைகளை தைரியப்படுத்தி, ஊக்கப்படுத்தி, ஊழியத்தில் பிரியப்படுகிற அன்பை பயிற்சிசெய்யவும், அந்த அன்பை அடையவும், விலையேறப்பெற்ற பலிசெலுத்தவுமேயாகும்.

**கருத்தில் கொள்ளவேண்டிய ஒரு பரிந்துரை**

சமீபத்தில் மரித்த பாஸ்டனிலுள்ள ஒரு அச்சக உரிமையாளர் ஒருவர், தனது வியாபார அடையாளஅட்டையில். பின்வரும் உபயோபகரமான, நடைமுறை பரிந்துரையை கொடுத்திருக்கிறார் ; "உங்கள் நண்பர்கள் இறக்கும்வரைக்கும் உங்கள் அன்பு மற்றும் இரக்கத்தின் பரணிப்பெட்டிகளை மூடியிருக்கும்படி வைக்காதீர்கள், மாறாக, இனிமையால் அவர்களின் ஜீவியங்களை நிரப்புங்கள். அவர்களுடைய செவிகள் அவற்றைக் கேட்கும்வரைக்கும், ஒப்புதல் அளிப்பதும் ஊக்கமளிப்பதுமாகிய வார்த்தைகளைப் பேசுங்கள். அவர்கள் சென்றபிறகு நீங்கள் பேசுகின்ற கருணையுள்ளவற்றை, அவர்கள் செல்லுமுன்பாகவே பேசுங்கள். அவர்களுடைய சவப்பெட்டியின்மீது பூக்களைத்தூவி வழியனுப்ப நினைக்கும் நீங்கள், இப்போதே அவற்றைக் கொடுங்கள். அவர்கள் இங்கிருந்து போகும் முன், அவர்களுடைய வீடுகள் இனிமையாயும், பிரகாசமாயும் இருக்கச்செய்யுங்கள்.

"என் நண்பர்கள் பரிவிரக்கம், பாசத்தின் நறுமண திரவியங்களை என் மரித்த சரீரத்தின்மீது ஊற்றும் நோக்கத்தில் பரணிப்பெட்டிகளில் தூரமாக வைத்திருப்பார்களானால், எனக்குத் தேவையான அவற்றை, என்னால் அனுபவிக்கமுடியாத அவற்றை என் களைப்பில், துன்பம் நிறைந்த தற்போதைய வேளைகளில் அவர்கள் கொண்டுவந்து, அவற்றைத் திறந்து, நான் புத்துயிரடையவும், மகிழ்ச்சியுறவும் செய்வார்களாக ! அன்பும் பரிவிரக்கமும் இன்றி வாழும் இனிமையில்லா வாழ்க்கையைக் காட்டிலும், பூக்களில்லாத வெற்று சவப்பெட்டியையே, புகழாரம் இல்லாத ஒரு இறுதிச் சடங்கையே விரும்புகிறேன். நம் நண்பர்களை அடக்கம் செய்யுமுன்பே, அவர்களை அபிஷேகம் செய்யக் கற்றுக்கொள்வோமாக !

"பிரேதப் பரிசோதனையில் வெளிப்படுத்தும் இரக்கம், பாரஞ்சுமக்கும் ஆத்துமாவை மகிழ்விக்காது, நேசிக்கப்பட்டவர்கள் பிரயாணித்திருந்த களைப்புற்ற வழியின்மீது, சவப்பெட்டியின் மீதுள்ள பூக்கள் பின்னோக்கி வந்து நறுமணத்தை வீசப்போவதில்லை".

------------------

**R 5547**

## யேகோவா தேவனின் பிரசன்னம் தம் ஜனத்துடன் நிலைத்திருக்கிறது

## JEHOVAH'S ABIDING PRESENCE WITH HIS PEOPLE

**"என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும் ; நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்"– யாத்திராகமம் 33:14.**

இஸ்ரயேல் ஜனங்கள் எகிப்தைவிட்டு வெளியே வந்திருந்தனர். அவர்கள் செங்கடலைக் கடந்திருந்து, சீனாய் மலையை வந்தடைந்தனர். மோசே மலைமீது ஏறிச்சென்று, நியாயப்பிரமாணப் பலகைகளை பெற்றுக்கொண்டு கீழே இறங்கி வந்தபொழுது, தேசம் விக்கிரகாராதனையில் ஈடுபட்டிருப்பதைக் கண்டார். அவர்கள் உண்டாக்கியிருந்த பொன் கன்றுக்குட்டியை வணங்கிக்கொண்டிருந்தனர். மோசே இன்னும் மலைமீது இருந்தவேளையில், அவர்கள் பொன் ஆபரணங்களை உருக்கி, எகிப்திலிருந்து வழிநடத்திவந்த கடவுள் இதுவே என்று அதற்கு பலிசெலுத்தி, உண்மை தேவனிடத்திலிருந்து விக்கிரகங்களிடத்திற்கு ஏற்கனவே விலகிவிட்டதை கர்த்தர் அவரிடத்தில் கூறினார். மலையிலிருந்து கீழிறங்கி ஜனங்களிடத்தில் செல்லுமாறு மோசேயிடம் அவர் அறிவுறுத்தினார். தேவகோபம் அவர்களுக்கெதிராக உக்கிரமாயிருந்து, அவர்களை தாம்

அழித்து, மோசேயை மாபெரும் தேசமாக ஏற்படுத்த உத்தேசித்திருப்பதாக அவர் கூறினார். ஆனால் இஸ்ரயேலருக்காக மோசே கர்த்தரிடம் உருக்கமாக வேண்டினார். அவருடைய விண்ணப்பம் கர்த்தரால் கேட்கப்பட்டு, தேசத்தை அழிவிலிருந்து காப்பாற்றியதோடு அவர் தொடர்ந்து அவர்களது தலைவராக இருக்கவேண்டும் என அவரை பலப்படுத்தினார்.

பின்பு மோசே மலையிலிருந்து கீழே இறங்கினார். இஸ்ரயேல் பயங்கரமான பாவம் செய்ததையும், தேவகோபம் அவர்களுக்கெதிராக மூண்டிருப்பதையும் அவர் உணர்ந்துகொண்டார். அவர்கள் தங்களுக்கென்று உண்டுபண்ணியிருந்த விக்கிரகத்தைச் சுற்றி நின்று சத்தமிடுகிறதைக் கேட்டும், விருந்துண்டும் நடனமாடியுமிருந்ததை அவர் கண்டபொழுது, தன் கரங்களில் தாங்கியிருந்த நியாயப்பிரமாணக் கற்பலகைகளை கீழேபோட்டு உடைத்தார். எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து தேவனால் மீட்கப்பட்ட தேசம் இந்த நிலைக்கு வந்திருந்தது. யேகோவா தேவனின் வல்லமையினால் செங்கடல் அவர்களுக்காக திறக்கப்பட்டது. தெய்வீக வழிகாட்டுதலுக்கான குறிப்பிடத்தக்க சான்றுகளால், அவர்களுடைய வழியில் பல்வேறு ஆசீர்வாதங்களையும் அவர்கள் அடைந்திருந்தனர். இவையனைத்தையும் மீறி, இங்கே கிளர்ச்சியும் விக்கிரகாராதனையும் செய்தனர். விரைவாக ஒதுக்கித்தள்ளி, தேவனை மதிக்காத இந்த ஜனங்களிடம் அவர் என்ன எதிர்பார்க்கமுடியும்? மோசேயின் சொந்த சகோதரராகிய ஆரோனும், பொன் கன்றுக்குட்டியை உருவாக்குவதில் அவர்களோடு இணைந்து செயல்படுவதை அவசியமென கருதி, ஜனங்களின் வற்புறுத்தலால் வழிதவறினார்.

பின்பு அவர்கள் உருவாக்கியிருந்த பொன் கன்றுக்குட்டியை மோசே எடுத்து, அக்கினியில் அதை சுட்டெரித்து, பொடியாக்கி, தண்ணீரில் அதைக் கரைத்து, ஜனங்களை கட்டாயப்படுத்தி அதைக் குடிக்கச்செய்தார். அவர் ஆரோனைக் கடிந்துகொண்டபிறகு, பாளையத்தின் வாசலில் நின்றுகொண்டு, ஜனங்களைப் பார்த்து, யேகோவா தேவனுக்காக நிற்பவர் யார்? அவர்கள் என்னிடத்தில் வரட்டும் என்று கூறினார். லேவியின் புத்திரர் எல்லோரும் தங்களை ஒன்றாக சேர்த்துக்கொண்டு அவரிடத்தில் வந்தார்கள். அவர்களிடத்தில் மோசே, "உங்களில் ஒவ்வொருவனும் தன் பட்டயத்தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு, பாளையமெங்கும் உள்ளும் புறம்பும் வாசலுக்கு வாசல்போய், ஒவ்வொருவனும் தன்தன் சகோதரனையும், ஒவ்வொருவனும் தன்தன் அயலானையும் கொன்றுபோடக்கடவன் என்று இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார் – யாத் 32:26–28.

**மோசேயின் கதறலும் அதற்கான பதிலும்**

அடுத்தநாள், அவர்கள் குற்றவாளிகளாக இருப்பதற்கான பாவம் எவ்வளவு பெரிதாயிருக்கிறது என்று மோசே அவர்களுக்கு விவரித்தபிறகு, ஜெபத்தில் கர்த்தரிடத்திற்கு செல்லப்போவதாகவும், ஒருவேளை கர்த்தர் அவர்களது பாவத்துக்கான ஒப்புரவாக்குதலை செய்யக்கூடும் என்று கூறினார். பின்பு அவர் கர்த்தரிடத்தில் ஊக்கமாய் வேண்டுகோள் விடுக்கச் சென்றார். தேவன் தம் பிள்ளைகளை மன்னிக்காவிடில், தன்னுடைய நாமத்தையும் அவரது புஸ்தகத்திலிருந்து அகற்றிவிடும்படிக்கு சொன்னார். ஆனால் "எனக்கெதிராக யார் பாவம் செய்திருந்தாலும் நான் அவர்களை என் புஸ்தகத்திலிருந்து நீக்கிவிடுவேன்" என்று தேவன் இதற்கு பதிலளித்தார். மோசேக்கு முன்பாக தேவதூதரை அனுப்புவதாக அவர் வாக்களித்திருந்தாலும், இஸ்ரயேலரது அக்கிரமத்தின் நிமித்தமாக அவர்களோடு செயல்தொடர்பு கொள்ளமாட்டேன் என்று தேவன் மோசேயினிடத்தில் உறுதியாய்க் கூறினார். அவர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள் என்பதை அவர்களிடத்தில் கூறும்படியும், அவரது நாமத்தில் அவர்களது ஆபரணங்களை களைந்துபோட அவர்களுக்குக் கட்டளையிடவும், அப்பொழுது அவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று அவர் அறிவார் என்றும் இஸ்ரயேலருக்கு சொல்லும்படி,மோசேயிடம் தேவன் அறிவுறுத்தினார்.

தேவனுக்கு ஜனங்கள் கீழ்ப்படிந்தார்கள். தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப்போட்டு, தங்களைத் தாழ்த்தி, கர்த்தரைத் தொழுதுகொண்டனர். அவர்கள் கீழ்ப்படிவார்களானால் கர்த்தர் அவர்களுக்கு வாக்களித்திருந்த தேசத்தை சுதந்தரிக்க இப்படிப்பட்ட முரட்டாட்டமுள்ள ஜனங்களை வழிநடத்துவதற்கு தனக்குத் தேவையான ஞானத்தையும் கிருபையையும் விசேஷித்த வழியில் தேவன் கொடுக்காவிட்டால் இது மிகக் கடுமையான பணியாயிருக்கும், அந்த முயற்சிக்கு தான் முற்றிலும் தகுதியானவனல்ல என்று மோசே பாரமான இருதயத்துடன் உணர்ந்தார். ஆகவே அவர் தேவனிடத்தில் மீண்டும் ஊக்கமாக ஜெபித்து முறையிட்டார். மோசேயின் கலக்கத்தை தேவனிடத்தில் கூறி, இப்பணி எனக்கு மிகப்பெரியதுஎன்று கூறி, தக்க உதவியை அவரிடத்தில் கேட்டு தன் தீவிரமான விருப்பத்தையும், அவருடைய பிரசன்னம் வழியிலெல்லாம் தன்னோடு இருக்கவேண்டுமென்றும் மன்றாடினார்.

அவரது பார்வையில் கிருபையைக் கண்டடைந்தபடியால், வாக்குத்தத்த தேசத்தை அடையும் பிரயாணம் முழுவதுமாக அவரோடுகூட தாம் வருவதாகவும், தம் பிரசன்னத்தை அவர் அடைந்திருப்பார் என்றும் கர்த்தர் மோசேக்கு அப்பொழுது உறுதியளித்தார். "என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் அளிப்பேன்" என்று அவர் கூறினார். அப்பொழுது மோசே கர்த்தரிடம்; "உம் மகிமையை எனக்குக் காண்பியும்" என்று மன்றாடினார். "ஒரு மனிதனும் என் முகத்தைப் பார்த்து உயிரோடிருக்கமுடியாது" என்று கூறி, அவ்விடத்தில் தேவன் மோசேயை கன்மலையின் பிளவுக்குள் வைத்து, தாம் கடந்துபோகும்போது அவரை தம் கரத்தால் மறைத்து, பின்புறத்திலிருந்து அவரது மகிமையை மோசே பார்க்கும்படி செய்தார்.

தேவன் தம் ஊழியக்காரர்களோடு தம் பிரசன்னத்தில் பேசுகையில், ஒரு ஜீவியாக அவரது சரீரத்தில் அவர் அவர்களுடன் பிரசன்னமானதாக நாம் கருதக்கூடாது, மாறாக அவரது ஆவியில், அவரது செய்தியாளர்களாகிய

தேவதூதர்கள் மூலமாக அவர்களைத் தாங்கி, ஆசீர்வதித்து வழிநடத்துகிறார். எவை அவர்களுக்கு தீங்கிழைக்குமோ, அவற்றிலிருந்து அவர்களை அவர் பாதுகாக்கிறார். அவர் அவர்களது ஒவ்வொரு நலனையும், அவர்களுக்கான கனிவான அக்கறைகளையும் கவனித்துக்கொள்கிறார்.

**தேவன் எங்கும் இருக்கிறார் என்ற கருத்து ஒரு பிழை**

தேவன் ஒரு நபராக எவ்விடத்திலும் நிஜமாகவே இருக்கிறார் என்ற கருத்து பொதுவாயிருந்தாலும், அது தவறானது. வேத வசனங்கள் அவ்வாறு போதிப்பதாக நாம் புரிந்துகொள்ளவில்லை. தேவன் ஒரு நபராக எல்லா இடங்களிலும் நேரில் இருக்கிறார் என்ற இந்தத் தவறு பொதுவாகவே எங்கும் நிலவிவருகிறது, அதே சமயம், அவர் ஒரு உயிருள்ள ஜீவியாக இருப்பதில்லை, ஒரு ஆதிக்கம் மட்டுமே என்று அநேகர் சிந்திக்கும்படி வழிநடத்தப்பட்டிருக்கிறார்கள். அவர் எங்கே குடியிருக்கிறாரோ, அவ்விடத்தில் அரசாங்கத்தின் மைய அரியணையை உடையவராய், அவர் செலுத்தும் வல்லமை மற்றும் செல்வாக்கைத் தவிர்த்து, தேவன் தனித்த சரீரப்பிரகாரமான பிரசன்னத்தை பெற்றிருக்கிறார் என்று வேதாகமம் இவ்விஷயத்தில் விளக்கக்காட்சியாகக் கூறுவதை நாம் புரிந்துகொள்கிறோம்.

“பரலோகம் எனக்கு சிங்காசனம், பூமி எனது பாதப்படி” என்று யேகோவா தேவன் கூறுகிறார். மாபெரும் தேவன் பரலோகத்தில் தம் அரியணையை உடையவரும், பூமியை தமது பாதப்படியுமாகக் கொண்டிருப்பவர். ஆனால் நிச்சயமாகவே இது வலிமைமிக்க ஒரு உருவகப்பேச்சாக, அவருடைய அரவணைக்கும் வல்லமையையும் கட்டுப்பாட்டையும் காண்பிக்கிறது. அவருடைய பிரபஞ்சத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் நிஜமாகவே தேவன் அமர்ந்திருந்து, தம் பாதத்தை சொல்லர்த்தப்படி வேறொரு பகுதியில் வைத்திருப்பதில்லை. மனுக்குலத்தின் அங்கங்களைப் போல தேவனும் அதே சரீரத்தினை அடைந்திருப்பதுபோல, வேதத்தின் மொழியானது மனித சிந்தைக்கு தானே இடமளித்து பேசுகிறது. ஆனால் ஆவிக்குரிய சரீரம் நிஜமாகவே எப்படியிருக்கும் என்று நமக்குத் தெரியாது. மாம்சத்தில் இன்னும் உள்ள கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்குக்கூட “அது இன்னும் வெளிப்படவில்லை”.

யேகோவா தேவனின் சரீரப்பிரகாரமான பிரசன்னம் பரலோகத்திலுள்ளதை நாம் புரிந்துகொண்டிருக்கிறோம். அவர் வரம்பற்ற வல்லமையுடைய மகா உன்னதமானவர் என்று வேதாகமத்திலுள்ள அனைத்துப் பகுதிகளும் நமக்குப் போதிக்கிறது. “கர்த்தர் வானத்திலிருந்து நோக்கிப்பார்த்து, எல்லா மனுபுத்திரரையும் காண்கிறார், தாம் வாசமாயிருக்கிற ஸ்தானத்திலிருந்து பூமியின் குடிகள் எல்லார்மேலும் கண்ணோக்கமாயிருக்கிறார்” – சங் 33:13,14. அவர்களுடைய வேதனையில் மனுஷரைத் தாங்கிப்பிடித்து, ஏற்றவேளைகளில் தம் மீட்பை அளித்திருக்கிறார். ஆனால் தேவன் பரலோகத்திலிருந்து கீழ்நோக்கிப் பார்க்கிற இக்கருத்துக்கும், பூமியில் தனிப்பட்டமுறையில் இருக்கிறார் என்ற கருத்துக்குமிடையேயுள்ள வேறுபாட்டை தெளிவாக நாம் காணவேண்டும். நாம் நமது பார்க்கும் வல்லமை மூலம், ஒருமைல் தொலைவு அல்லது 5மைல் தொலைவுவரை காணமுடியும். நம் குரலின் வல்லமையால் நாம் நூறு அடி அல்லது அதற்கு அதிக தொலைவில் நம் பிரசன்னத்தைக் காட்டமுடியும். அல்லது நவீன கண்டுபிடிப்பாகிய தொலைபேசியின் உதவியால் பல நூறு மைல்களுக்கு அப்பால் நம் குரலினால் நம் பிரசன்னத்தைக் காண்பிக்கமுடியும். இந்த வார்த்தையின் உணர்வின்படி அவரது பரந்த பிரபஞ்சம் முழுவதும் கர்த்தர் எவ்விடத்திலும் இருக்கிறார். அவருடைய வல்லமை எல்லா இடங்களிலும் பிரயோகிக்கப்படமுடியும். பூமியின் அனைத்து நடவடிக்கைகளையும் மற்றும் அவரது மாபெரும் ஆளுகையை குறித்த விஷயங்களையும் விழிப்புணர்வுடன் அறிந்திருக்கக்கூடிய வழிகள் அவரிடம் உள்ளன.

நாம் இந்த வல்லமைகளை மிகக் குறைந்த அளவே அடைந்திருக்கிறோம். தொலைபேசி, தந்தி, தொலைநோக்கி ஆகியவற்றின் மூலம் நம் பிரசன்னம், வல்லமை மற்றும் ஆதிக்கம் எல்லா வழிகளிலும் குறிப்பிட்ட அளவு நீட்டிக்கப்பட்டுள்ளன. ஆயினும் ஜெபத்தின் வழிகள்மூலம் கூடுதலாக அவற்றை நாம் விரிவுபடுத்துவதைத் தவிர, இந்த சிறு கிரகத்தில்(Planet) நம் வல்லமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஆதிக்கங்களை இயக்கினாலும் அதன் நீட்டிப்பை தற்போது நம்மால் அளவிட முடியவில்லை. ஆனால் தற்காலத்தில் இந்த சிலாக்கியம் சிலருக்கு மட்டுமே உள்ளது. இப்பிரபஞ்சத்தை கட்டுப்படுத்தும் வல்லமையை இவ்வாறு அணுகுவதற்கு அநேகரால் முடியாது. வலிமைமிக்க பரலோக ராஜாவிடத்திற்கு வரும் சிலாக்கியத்தைப் பெற்ற இவர்கள், அவரது நியமிக்கப்பட்ட வழியில், அவர் ஏற்படுத்தியிருக்கிற நிபந்தனைகளுக்கு கீழ்ப்பட்டு மட்டுமே வரமுடியும்.

யேகோவா தேவனின் வல்லமைமீது நம்மால் எந்த வரையறைகளையும் போடமுடியாது. தகவல்தொடர்பு வல்லமைகளை அதிகரிக்கிற இந்த முடிவுக்காலத்தின் கண்டுபிடிப்புக்கள், பூகோளத்தின் எல்லாப் பகுதிகளையும் ஒன்றிணைத்து, சர்வவல்லமை வாய்ந்த தேவனுடைய எல்லையில்லா வல்லமைகள்மீது மிக மங்கலான கருத்தாக்கத்தை நமக்கு அளிக்கின்றன. இக்கண்டுபிடிப்புக்கள் வரவிருக்கிற யுகத்தில் தொடர்ந்து அதிகரித்து, பன்மடங்கு பெருகும் என்று நாங்கள் நம்புகிறோம். இவ்வாறு வல்லமைகளை அதிகதிகமாகக்கூட்டி மனுக்குலத்தை ஆசீர்வதிக்கும். இவைகள் தங்கள் சிருஷ்டிகரின் மாட்சிமையையும் மகிமையையும் பராக்கிரமத்தையும் பற்றிய ஒரு பெரிய மற்றும் அதிக மதிப்பை அளித்து, அவர் இருக்கிற வண்ணமாகவே அவரை அறிந்துகொள்ளவும், ஆவியிலும் சத்தியத்திலும் அவரை ஆராதிக்கவும் செய்யும். எவ்வளவு பூரணமாயிருந்தாலும், எந்த மனித சிந்தையாலும் இப்பிரபஞ்சத்தின் சிருஷ்டிகரைப் புரிந்துகொள்ள முடியாது.

**வனாந்திரப்பயணத்தில் தேவனுடைய வழிகாட்டுதல்**

ஆகவே தம் பிரசன்னமும், தம் வல்லமையும், தம் நிலைத்திருக்கும் கிருபையும் மோசேயோடு பிரயாணம் முழுவதிலும் செல்லும் என்று தேவன் அவருக்கு

வாக்களித்திருந்தார். போதுமான ஆதாவு இல்லாமல் தன்னால் இந்த மாபெரும் பணியை தனித்து செய்யமுடியாது என்று மோசே புரிந்துகொள்ளவேண்டுமென்று தேவன் விரும்பினார். ‘‘நான் உன்னோடு இருப்பேன்’’ என்பதே வாக்குத்தத்தமாயிருந்தது. கர்த்தருடைய பிரசன்னம் இஸ்ரயேல் புத்திரரோடு மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் இருந்தது. அவர்கள் செங்கடலைக் கடக்கும் நேரத்திலிருந்து தொடர்ச்சியாக அவர்களோடு இருந்து, ஆசீர்வாதங்கள் அல்லது சிட்சைகள் இவற்றில் அவர்களுக்கு அவசியமானதைக் கொடுத்து வழிகாட்டியது. அவர் பகலில் மேக ஸ்தம்பத்திலும், இரவுவேளையில் அக்கினி ஸ்தம்பத்திலும் ஆசரிப்புக்கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில், கிருபாசனத்தை மூடியிருந்த ஷெகின்னா மகிமையில் உள்ள அவரது பிரசன்னத்தினால் அவர் அவர்களோடு இருந்தார். தேவனுடைய அறிவுரைப்படி ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்பட்டபிறகு, அவரது பிரசன்னத்தின் இந்த வெளிப்பாடுகள் , அவரது வல்லமை மற்றும் அவருடைய கவனமான பராமரிப்பு ஒருபோதும் தவறினதில்லை. மேக ஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும் அவர்களுடைய பிரயாணங்களில் வழிகாட்டின. இவைகள் தங்கும்போது அவர்கள் எங்கு இருக்கிறார்களோ, அங்கேயே தங்கவேண்டும், மீண்டும் மேக ஸ்தம்பமோ அல்லது அக்கினி ஸ்தம்பமோ அவ்விடத்திலிருந்து புறப்படும்வரை அங்கு நிலைத்திருக்கவேண்டும் என்பது தேவனிடமிருந்து வந்த சமிக்சையாய் இருந்தது.

‘‘உம் பிரசன்னம் எங்களோடு வராவிடில், இவ்விடத்திலிருந்து எங்களைக் கொண்டுபோகாதிரும்’’என்று மோசே கர்த்தரிடம் கூறினார். எந்த ஒரு மனிதனாலும் தனித்து நிறைவேற்றுவதற்கு இது மிகப் பெரிய சவாலாக இருந்தது, ஆனால் உம் பிரசன்னம் எங்களோடு தொடர்ந்து வருமானால், உம் சித்தத்தை எனக்குக் காண்பித்து, உம்மால் தொடர்ந்து நடத்தப்படுவேனேயானால், அப்பொழுது கானான் தேசத்தை அடையும் இந்த வனாந்திரப் பிரயாணம் முழுவதிலும் இந்த ஜனங்களை என்னால் நடத்திச்செல்ல முடியும். ஆசரிப்புக் கூடாரத்தின் மூலமாக கர்த்தர் அடிக்கடி மோசேயிடம் பேசினார். இவ்வாறு மோசேயுடனான கர்த்தரது பிரசன்னத்தின் வாக்குத்தத்தம் நிறைவேறியதை நாம் காண்கிறோம். கர்த்தர் அவருக்கு இளைப்பாறுதலைத் தந்தார். அவர் 120 வருடங்கள் வாழ்ந்திருந்தாலும், அவரது பலம் குன்றவுமில்லை, அவரது கண்பார்வை மங்கவுமில்லை. ஜனங்களை நியாயந்தீர்க்கும் பணி மிகப்பெரியதாய் தனக்கு இருந்ததை மோசே உணர்ந்த அந்த நேரத்தை நாம் நினைவுகூருவோம். கர்த்தரிடத்தில் இவ்விஷயத்தை மோசே எடுத்துச்சென்றார், அவருடைய சுமையைப் பகிர்ந்துகொள்ள 70 நியாயாதிபதிகள் அப்பொழுது தெரிந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு மிகக் கடினமாயிருந்த விஷயங்களை மோசேயினிடத்தில் அவர்கள் கொண்டுசென்றனர். அவரோ தம் எல்லா சிரமங்களையும், சுமைகளையும் தேவனிடத்திற்கு எடுத்துச்சென்று, தொடர்ச்சியான ஆசீர்வாதங்களை அடைந்திருந்தார்.

**ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கான பாடம்**

மாம்ச இஸ்ரயேலருடைய அனுபவங்கள், ஆவியின்படியான இஸ்ரயேலருக்கு மிக முக்கியமான பாடங்களைத் தருகின்றன. ஆதியில் உலகின் ஒரு பகுதி ஜனங்களாக இருந்தவர்களை, உலகிலிருந்து வெளிவரும்படியும், புதிய தேசத்திற்கு பிரயாணிக்கும்படியும், பரலோக சுதந்திரத்திற்குள் பிரவேசிக்கும்படியும் நாம் அழைக்கப்பட்டிருந்தோம். நாம் உண்மையுள்ளோராக இருப்போமாகில், நமக்கு வாக்களிக்கப்பட்ட மகிமையுள்ள இராஜ்யத்தைநோக்கி முன்னேறிச்செல்வோம். செல்லும் வழியில் கடினங்களும் சோதனைகளும் உண்டு. ஆயினும் தம் ஊழியக்காரனாகிய மோசேக்கு அவர் வாக்களித்திருந்தவாறே அவரது சமுகம் நம்மோடு கூடவரும் என்று நம் தேவன் நமக்கு வாக்களித்துள்ளார். சில சமயங்களில், நம்மை நாமே கவனித்துக்கொள்ளும்படி, அவர் நம்மிடமிருந்து விலகுவதுபோல் காணப்படுகிறது.ஆனால் உண்மையிலேயே அவர் அவ்வாறு செய்வதில்லை. சில சமயங்களில் அவரது பிரசன்னத்துக்குரிய உணர்வை தடைசெய்வதன் மூலம், அவர் நம் உண்மைத்தன்மையையும், நம் விசுவாசத்தையும் பரீட்சிக்கிறார்.

ஆகவே நாம் பழைய இஸ்ரயேலரைப்போல், இனிமேல் தேவன் நம்மோடு இல்லை என்று முடிவெடுத்து, நாம் முன்பு தொழுதுகொண்டிருந்த செல்வம் அல்லது இன்பம் என்ற கடவுளர்களிடத்திற்கு நம்மை சுற்றிலுமுள்ள தேசத்து ஜனங்களின் தேவ வணக்கத்துக்கு மீண்டும் திரும்புவோமா ? களியாட்டத்திற்கும், உலக மகிழ்ச்சிக்கும், பாவத்துக்கும் நம்மை ஒப்புக்கொடுப்போமா ? நம் கடந்தகால வாழ்க்கையில் பதிவாகியிருக்கிற மாபெரும் மீட்புக்கள் அனைத்திலும், நம் தேவன் நம்மை நடத்திவந்த எல்லா வழிகளையும் நாம் மறந்துவிடுவோமா ? ‘‘உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ ... அல்லது மரணமானாலும், ஜீவனானாலும்...நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்... வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு’’ இவைகளில் ஒன்றாவது நம்மைப் பிரிக்குமா ? நிச்சயமாக முடியாது.

கர்த்தரிடத்தில் நாம் நெருங்கி ஜீவித்து, நம் விசுவாசம் பெரியஅளவில் இருக்கும்போது, தெய்வீக வழிகாட்டுதலை அதிகமாய் நாம் உணர்ந்திருந்து, நம் பலத்துக்கும் ஆதரவுக்குமென அவர் நமக்குக் கொடுத்திருக்கிற வழிகளை நாம் உபயோகிப்போம். உபத்திரவக் காலத்தில் நாம் அவரை நோக்கிக் கூப்பிடலாம், ஜெபத்தில் நாம் அவரிடத்திற்குச் செல்லலாம்; அவரிடத்தில் தங்கள் நம்பிக்கையை வைத்து, அவர் நியமித்திருக்கிற வழியில் நடக்க ஊக்கமாய் முயற்சிப்போரை அவர் ஒருபோதும் மறப்பதில்லை. இது உண்மையாயிருந்தால் நாம் பூரண நம்பிக்கையுடனும் பற்றுறுதியுடனும் நம் பிரயாணத்தில் முன்நோக்கிச் செல்லலாம். கர்த்தரிடத்தில் நம் அனைத்தையும் அர்ப்பணித்திருந்து, அவரது வழிகாட்டுதலை நாம் நாடும்போது, நம் ஜீவியத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் அவரது சமுகம் நம்மோடு வரும்.

மோசே அடைந்திருந்ததுபோல, அப்படிப்பட்ட பலமான சுமைகளை ஒருசிலரே சுமக்கின்றனர். ஆனால் தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் சுமப்பதற்கென சுமைகளை பெற்றுள்ளனர், நம் தேவனுடைய பொருத்தனைகளை ஏற்றுக்கொண்ட நம் ஒவ்வொருவர்மீதும் முக்கியமான

பொறுப்புக்கள் உள்ளன. தேவனுடைய உண்மை இஸ்ரயேலராகிய கிறிஸ்துவின் சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும், தங்கள் வனாந்தரப்பிரயாணத்தின் ஒவ்வொரு அனுபவத்திலும் கர்த்தருடைய தொடர்ச்சியான வழிகாட்டுதலை சிலாக்கியமாக அடைந்துள்ளனர். நம் அன்றாட வாழ்வாதாரத்திற்கு பரலோக மன்னா வழங்கப்படுகிறது. நம் அனுதின புத்துணர்ச்சிக்காக, யுகங்களின் அடிக்கப்பட்ட கன்மலையிலிருந்து ஜீவத்தண்ணீர் நமக்குப் பாய்ந்துவருகிறது. நாம் ஆபத்தில் இருக்கும்போது அல்லது தடைசெய்யப்பட்ட பாதைக்குள் நாம் அலைந்துதிரியும்போது, நம் பிதாவின் சிட்சிக்கும்கோல் நம்மைத் தடுக்கிறது. நம் காயங்களை குணப்படுத்தி, நம் தடுமாற்றங்களையும் பலவீனங்களையும் கிருபையாய் மன்னித்து, எவ்வளவு நேர்த்தியாக, சரியானவழியில் திரும்பவும் கொண்டு சேர்க்கிறார். நிச்சயமாகவே நம் பரலோக வழிகாட்டியின்மீது நாம் அசைக்கமுடியாத நம்பிக்கை வைக்கலாம். இவ்வாறு நாம் அவரில் இளைப்பாறவும், பூரண சமாதானத்தில் காத்துக்கொள்ளவும் முடியும். கவிஞரோடு சேர்ந்து நம் இருதயங்கள் மெய்யாகவே ஆர்ப்பரிக்கமுடியும்;

“என்னால் பார்க்கமுடியாத வேளையிலும் நான் அறிந்திராத வழிகளிலும் அவர் என் நடைகளைக் காத்திருக்கிறார்; நான் கர்த்தரை மட்டுமே பின்பற்றினதால் வளைவுகள் நேராக்கப்பட்டன, கரடுமுரடானவைகள் சமவெளியாக்கப்பட்டன

இனிமையான உள்ளங்கைகளுக்காகவும், வழியிலுள்ள நீரூற்றுகளுக்காகவும் பகலில் பாதுகாக்கும் மேகத்துக்காகவும் இரவில் ஒளிரும் அக்கினி ஸ்தம்பத்துக்காகவும் அவரது நாமத்தை நான் துதிக்கிறேன். எனக்கு இளைப்பாறும் ஸ்தலத்தைக் கண்டறிய முழு உலகின் தேவன் முன்னே சென்றபோது, தடம் இல்லாத காட்டில் எனக்கு வெளிச்சம் இருப்பதை பழைய அதிசயங்களென நான் அடையாளங் காண்கிறேன்;

எனக்காக அவர் மாற்றிக்கொண்டாரா ? அல்ல, அவர் மாறாதவர்; சில புதுவழியால் அவர் என்னை கொண்டுவருகிறார், அக்கினியிலும், வெள்ளத்தினூடேயும் ஒவ்வொரு தந்திரமான எதிரியிடமிருந்தும் நேற்றைய தினத்தைப்போல் பாதுகாப்பாயிருக்கிறேன்.

முரட்டாட்டத்திலும், நிலையற்ற தன்மையிலுமிருந்த ஜனங்களாகிய மாம்சீக இஸ்ரயேலரை உண்மையாய் பராமரித்தவர், அவரை எல்லாவற்றிலும் மேலாக நேசித்து, அவரது சித்தத்தை செய்வதற்காக அனுதினமும் முழுமையாய்த் தேடுகின்ற அவரது உண்மை ஆவிக்குரிய இஸ்ரயேலரை அபரிதமாக நிச்சயம் பராமரிப்பார்.

“விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்(எபி 4:3) என்று அப்போஸ்தலர் பவுல் கூறி, சுபாவ இஸ்ரயேலருடைய அவிசுவாசத்தின் அதே மாதிரிகையின்படி விழுந்து போகாதிருக்கவும்,, இவ்வாறு கர்த்தர் மீதான பிடியை இழக்காதிருக்கவும் ஆவிக்குரிய இஸ்ரயேலரை எச்சரிக்கிறார். கர்த்தருடைய தயவுபெற்ற ஜனங்களாயிருந்த மாம்சீக இஸ்ரயேலருக்கு மட்டுமே மிகவும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்களது அவிசுவாசமே கீழ்ப்படியாமைக்கும், முறைகேட்டுக்கும் நடத்தி, இறுதியில் அவரால் நிராகரிக்கப்படவும் அதுவே அவர்களை வழிநடத்தினது. ஒரு தேசமாக அவர்கள் பெற்றிருந்த விசேஷ தயவாகிய சுதந்தர பாகத்தை அவர்கள் இழந்தனர். இது ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு எப்பேர்ப்பட்ட ஒரு பாடம்! ஆயினும், இன்றையநாளில் ஆவிக்குரிய இஸ்ரயேலரின் பெருந்திரளானோர், அவிசுவாசத்தின் அதே மாதிரிகையைப் பின்பற்றி விழுந்துபோவதை நாம் இன்னும் காண்கிறோம். மாம்ச இஸ்ரயேலரது அவிசுவாசத்தின் காரணமாக அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு, ஆவிக்குரிய இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்டிருந்த தயவின் பிரதான ஸ்தானத்தை இவர்களும் இழப்பார்கள். சுபாவத்துக்குரிய மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய இரு வகுப்பாரில் உண்மையுள்ளோராய் மீந்திருப்போர் மட்டுமே, கர்த்தரால் வைக்கப்பட்டிருக்கிற பெரும் சுதந்திரத்தை ஆதாயமாக்குவார்கள்.

**ஆவிக்குரிய இஸ்ரயேலர் அடையும் மகிமைநிறைந்த சுதந்திரம்**

தற்கால யுகத்தின்போது உண்மையுள்ளவர்களாக தங்களை நிரூபிக்கிறவர்கள், பல யுகங்களாக மறைத்து வைக்கப்பட்டிருந்து, ஆனால் தற்போது தேவனுடைய உண்மை பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட இரசியங்களாகிய, தேவன் அருளுகிற மிகவும் விலையுயர்ந்த காரியங்களைசுதந்தரித்துக்கொள்வார்கள். கடந்த யுகங்களில் உண்மையாய் இருந்தவர்கள், மேசியாவின் மகிமை நிறைந்த ஆளுகையின்போது மனுக்குலத்தின்மீது ஆளுநர்களாகவும், பிரபுக்களாகவும் இருக்கும்படி பூமியை சுதந்தரித்துக்கொள்வார்கள். இவர்கள் அப்பொழுது ஜீவிக்கின்ற சுபாவ இஸ்ரயேலரை கூட்டிச் சேர்ப்பார்கள். அவர்கள் வளமான மரபுரிமையை அடைந்திருப்பார்கள், வரவிருக்கிற மகிமையின் யுகங்களில் அவர்கள் பின்பற்றுவதற்கு என்ன மீதமிருக்கும் என்று தீர்மானமாக நாம் அறியமுடியாது, ஆனால் அது ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு பாகமாக இருக்கும் என்று நாம் நிச்சயித்திருக்கலாம்.

தற்கால யுகத்தின் உண்மையுள்ளவர்கள், “யூதாக் கோத்திரத்து சிங்கமாகிய கிறிஸ்துவோடுகூட பரலோக ஸ்தலங்களில் உட்காரும்படி” எழுப்பப்பட்டிருப்பார்கள். இந்த உண்மையுள்ளவர்கள், அவரோடுகூட ஆளுகை செய்யப்போகிற இஸ்ரயேலின் 12 கோத்திரங்களாயிருக்கிறார்கள். இந்த சுவிசேஷயுகத்தின் துவக்கத்தில் கூட்டி சேர்க்கப்பட்ட சுபாவ இஸ்ரயேலரில் உண்மையுள்ளோராக மீந்திருந்தவர்களும், புறஜாதிகளிலிருந்து உண்மையாய் மீந்திருப்பவர்களுமாக , இவர்கள் சிறுமந்தையாக, 1,44,000பேருள்ள எண்ணிக்கையுடையோராக, இந்த யுகத்தின் திருச்சபையாயிருப்பர்(வெளி 7:4–8 ; 14:1–5). வேறு எவராலும் அறியமுடியாத “எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை இவர்கள் பெற்றிருப்பார்கள், “என் சமாதானத்தை உங்களுக்கு அளிக்கிறேன்” என்று இவர்களிடத்தில் எஜமான் மெல்லப்பேசுகிறார். நாம் தற்போது, விசுவாசத்தின் இளைப்பாறுதலைப் பெற்றிருக்கிறோம், இந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திருக்கிற நாம், சோர்வுறாதிருப்போமாகில் ஏற்றவேளையில் “தேவனுடைய பிள்ளைகளுக்காக வைக்கப்பட்டிருக்கும் (முழுமையான) இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்போம்”. நம் கர்த்தருடைய சாயலுக்கொப்பாக சரீரத்தில் மாற்றப்படும்போது, தேவனால் நாம்

தற்போது காணப்பட்டும் அறியப்பட்டும் இருக்கிறதுபோல, அவரை அறிவோம் காண்போம். நாம் முதலாம் உயிர்த்தெழுதலில் நம் மகிமை நிறைந்த "மாறுதலை" அடையும்போது, இந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்போம். அப்பொழுது அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற அவருடைய சொந்த சுபாவமாகிய சாவாமை ஜீவனின் மகா மேன்மையான மகிமையால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருந்து, நம் இரட்சகரோடுகூட அவருடைய சிம்மாசனத்தில் உட்காருவோம்.

இஸ்ரயேலின் தேவன், தம் உண்மை ஜனங்களோடு மெய்யாகவே எப்பொழுதும் இருக்கிறார். அவர் நம்மை ஒருபோதும் மறவாமல், நம் நலன்களையே நிலையாக நோக்கிப் பார்க்கிறார். நம் ஆவிக்குரிய மற்றும் சரீரத்துக்கடுத்த தேவைகளையும், புதுசிருஷ்டியின் நலனுக்கு எவையெல்லாம் சிறந்ததோ அவைகளையும் அளிக்கிறார். அபாயமான ஒவ்வொரு வேளையிலும் நம்மைப் பாதுகாக்கிறார். நம் இருதயங்களின் ஒவ்வொரு நினைவையும் அவர் அறிகிறார்; நம் அர்ப்பணிப்பின் ஒவ்வொரு தூண்டுதலையும்அவரிடத்திலான அன்பையும் அவர் குறியிடுகிறார். நம்மை ஒழுங்குபடுத்துவதற்காகவும், சுத்திகரிக்கவும் நம் வாழ்க்கையைச் சுற்றிலுமுள்ள ஆதிக்கங்கள் அனைத்தையும் அவர் வடிவமைக்கிறார். அவரிடத்தில் ஐக்கியம் வைக்கவும், இரக்கம் வேண்டியும், உதவிக்காகவும் தேற்றுதலளிக்கும்படி கேட்கும் நம் ஒவ்வொரு கூக்குரலுக்கும் செவிசாய்க்கிறார்.அவர் ஒருநொடிகூட நம்மை மறப்பதில்லை அல்லது பாதுகாப்பை நீக்குவதில்லை. "இஸ்ரயேலைக் காக்கிறவர் உறங்குகிறதுமில்லை, கண்ணயர்வதுமில்லை"– சங் 121:4(திரு விவிலியம்). பகலின் ஓய்வில்லாத நேரங்களிலோ அல்லது அமைதியான இரவு வேளைகளிலோ அவரைக் கூப்பிடுவோமானால், நாம் அவரது பிரசன்னத்தை எல்லா நேரங்களிலும் உணர்ந்தாலும் அல்லது உணராவிட்டாலும், நம்மை போஷிக்கவும், பாதுகாக்கவும் நம்மைத் தாங்குவதற்கு நம் அருகில் இருக்கிறார்.

இப்படிப்பட்ட நிலையான, தங்கி தாபரிக்கும் பராமரிப்பு மற்றும் உண்மைத்தன்மையானது, எப்பேர்ப்பட்ட நிச்சயமான ஆசீர்வாதமாயுள்ளது! இஸ்ரயேலின் தேவனாகிய தகப்பனின் விலையேறப்பெற்ற இந்த உறவின் சாட்சியங்களிலிருந்து, தேவனுடைய எந்த நிஜமான பிள்ளையும் விலக்கப்படுவதில்லை. பரலோக அழைப்புக்கென்று அழைக்கப்பட்டிருக்கிற பரிசுத்தவான்கள், அந்த அழைப்பை உண்மையாய் ஏற்றிருப்பவர்கள், உயரிய உணர்வில் அவருடைய உண்மை இஸ்ரயேலராயிருந்து, அவருடைய எல்லா விருப்பமான வாக்குத்தத்தங்களுக்கும் வாரிசுகளாகின்றனர். நம்முடைய சுதந்திர பாகம் எவ்வளவு அருமையானது!

-------------------

**R 5549**

## சபைக்கான அபிஷேகம்

## THE ANOINTING OF THE CHURCH

**"நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது"– 1யோவான் 2:27.**

இஸ்ரயேல் தேசத்துடனான தெய்வீக ஏற்பாட்டின் கீழ் முழு ஆசாரியத்துவத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிற அவர்களுடைய பிரதான ஆசாரியர்கள் பரிசுத்த அபிஷேக எண்ணெய் என்று அழைக்கப்படுகிற விசித்திர வகையிலான விலையுயர்ந்த வாசனை திரவியத்துடன் கூடிய ஒரு அபிஷேகத்தின் மூலம் பதவியில் அமர்த்தப்படுகின்றனர். இந்த எண்ணெய் ஒரு விசேஷித்த விதியமைப்பின்படி உருவாக்கப்பட்டபடியால், மரண தண்டனை மீது அதைப் பயன்படுத்த ஜனங்கள் அனுமதிக்கப்படவில்லை. இஸ்ரயேல் ஒரு இராஜ்யமாக ஆனபிறகு அதன் இராஜாக்களும் இந்த பரிசுத்த அபிஷேக எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்பட்டனர்.

பிற்பாடு ஒரு ஒருங்கிணைந்த ஊழியத்தின் நிழலாகக் காண்பிக்கப்பட்ட ஆசாரியர் மற்றும் இராஜா என்கிற இந்த இரண்டு அலுவல்கள், அது இராஜரீக ஆசாரியராக, ஒரு ஆசாரிய ராஜாவாக தம்முடைய சிங்காசனத்தின்மீது இருக்கிற ஒரு ஆசாரியராக இருந்த ஒருவரில் அதன் நிஜத்தைக் காணச்செய்தது. இந்த ஒன்றுபட்ட அலுவலின் ஒரு நிழலை மெல்கிசேதேக் என்ற நபரில் வேதம் நமக்குக் கொடுக்கிறது. அவர் சாலேமின்(சமாதானத்தின்) இராஜாவாகவும், உன்னதமான தேவனின் ஆசாரியராகவும் இருந்தார் என்று அவரைப்பற்றி எழுதப்பட்டிருந்தது(ஆதி 14:18–20; எபி 7: 1–17). இவ்வாறு வசனங்களுடன் வசனங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் உலகத்தை ஆசீர்வதிக்கிற மாபெரும் பணியை நிறைவேற்றவிருக்கும் மேசியா, இராஜா மற்றும் ஆசாரியர் என்கிற இரண்டு அலுவல்களையும் ஒருங்கிணைக்கும் ஒருவராக இருக்கப்போகிறார் என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம்.

நிழலை நெருக்கமாக சோதித்துப்பார்க்கையில், பிரதான ஆசாரியரை அவரது பணியில் அமர்த்தும்போது மாத்திரமே பரிசுத்த அபிஷேக எண்ணெயானது அவருடைய தலையின்மீது ஊற்றப்பட்டது என்பதை நாம் காண்கிறோம். அவருடைய தலையின்மீது பெருமளவில் தாராளமாக ஊற்றப்பட்ட அந்த எண்ணெய், அவருடைய ஆசாரிய வஸ்திரங்களின் அங்கிகளின்மேல் இறங்குகிறதாயிருந்தது. பின்னர் நாம் பார்ப்பதுபோல் இந்த சூழ்நிலையும்கூட நிழலாய் இருந்தது.

நிழலிலிருந்து நிஜத்திற்கு முன்னோக்கிச்சென்று பார்க்கையில், சாத்தானைக் கட்டுகிற எல்லா தீய செல்வாக்குகளையும் கட்டுப்படுத்துகிற, முழு உலக மனுக்குலத்திற்கும் தேவனுடன் சீர்பொருந்தச் செய்வதற்கான ஒரு முழு வாய்ப்பை வழங்குகிற ஒரு மாபெரும் மேசியாவின் இராஜ்யம் பூமியில் நிறுவப்பட இருக்கிறது என்பதை போதிக்கிற வேத வசனங்களை நாம் புரிந்துகொள்கிறோம். இந்த இராஜ்யத்துடன் தொடர்புடைய ஒரு மாபெரும் ஆசாரிய வேலை

செய்யவேண்டியிருக்கிறது என்பதையும்கூட நாம் புரிந்துகொள்கிறோம். இதுவும் மேசியாவின் மாபெரும்வேலையின் ஒரு பகுதியாக இருக்கும். இது இப்படியாக இரட்டிப்பாக காண்பிக்கப்படுகிறது. அதாவது இராஜாவாக மனுக்குலத்தின் ஆசீர்வாதத்திற்காக இருப்புக்கோலால் அவர் அவர்களை ஆட்சிசெய்வார் என்றும், ஆசாரியராக அவர் அவர்களை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவர்களுடைய நோய்களை குணமாக்கி, அறிவுரைகூறி, உயர்த்துவார் என்பதையும் காண்பிக்கிறது.

**மகிமையின் நம்பிக்கையாக கிறிஸ்து உங்களில் இருக்கிறார்**

தங்கள் மேசியா, பூமியின் எல்லாக் குடும்பங்களையும் ஆசீர்வதிக்கிற ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் சந்ததியாக இருக்கவேண்டும் என்பதை இஸ்ரயேல் தேசம் நன்கு புரிந்திருந்தது. ஆனால் நம் கர்த்தரின் முதலாம் வருகை வரை, இந்த வித்து ஒரு தனிப்பட்ட நபருக்கும் அதிகமானோரைக் கொண்டிருக்கும் என்பதை புரிந்துகொள்ளவில்லை. இந்த உண்மையை நம் கவனத்துக்குக் கொண்டுவந்த அப்போஸ்தலர் பவுல், மேசியா ஒரு தனிப்பட்ட நபர் அல்ல, மாறாக ஒரு தலைமைத்துவத்தின் கீழ் இருக்கும் ஒரு கூட்டம், இது முந்தைய யுகங்களில் மறைக்கப்பட்ட இரகசியமாய் இருந்தது என்று அறிவிக்கிறார் (எபே3:2–7 ; கொலே 1:25/27). மேலும் இந்த மேசியா பலதரப்பட்டோரை உள்ளடக்கினவராக இருப்பார் என்பது மாத்திரமல்ல, அநேக தேசங்களின் மத்தியிலிருந்து இவர்கள் கூட்டிச்சேர்க்கப்படவேண்டும்.

இந்த இரகசியத்தை சிலர் மாத்திரமே புரிந்துகொள்ளமுடியும். அநேகர் இதை இன்னும் புரிந்துகொள்ளவில்லை. உண்மையில் இது ஒரு விசேஷ வகுப்பாரால் மாத்திரமே புரிந்துகொள்ளப்படும், அவர்களுக்கென்றே இது வடிவமைக்கப்பட்டிருக்கிறது. சுவிசேஷயுகம் சாலமோனைக் காட்டிலும் பெரியவராய் இருக்கிற இந்த மாபெரும் நிஜமான இராஜாவின் தேர்ந்தெடுத்தலுக்காக தனியாக பிரித்துவைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாபெரும் நிஜமான இராஜரீக ஆசாரியர் மெல்கிசேதேக்கினால் குறிப்பிடப்படுகிறார். நிஜமான ஆசாரியர் மற்றும் இராஜாவாக இந்தக் கூட்டத்தின் அங்கத்தினர்களாக இருக்கும் நபர்களுக்காக இந்த யுகத்தின் அழைப்பு இருக்கிறது.

**அங்கத்தினர்களுக்கான நிபந்தனைகள்**

இந்த இராஜ்ஜிய வகுப்பாரின் அங்கத்தினர்களாக மாற விரும்பும் அனைவரும், தேவ தயவு அவர்களுக்கு வரக் காரணமாயிருக்கிற நம் கர்த்தராகிய இயேசுவை நோக்கிப் பார்க்கவேண்டும். ‘‘அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழ் எங்கும் மனிதர்களுக்குள்ளே அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை’’. கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலிலிருந்து ஜீவனுக்கான ஒரு புதிய வழி திறக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்து தம் சரீரமாகிய சபையின் தலையாக இருப்பார், முழு சபையும் மாபெரும் நிஜமான தீர்க்கதரிசி, ஆசாரியர் மற்றும் இராஜாவை நீண்ட காலமாக எதிர்பார்த்த ஆபிரகாமின் வித்தை பூர்த்திசெய்யும்–கலா 3:8,16,29.

எனவே அர்ப்பணிப்பில் தேவனுக்கு தங்களையே பலியாக ஒப்புக்கொடுத்திருக்கிற அனைவரும், சிலுவையை எடுத்துக்கொண்டு எஜமானை பின்பற்றுவார்களாக. அவர் ஜீவித்ததைப்போல அவர்களால் முடிந்தவரை ஜீவித்து, அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பார்களாக. நாம் மாம்சத்தின்படி பரிபூரணர்களாக இருக்க முடியாது என்றாலும், அதேசமயம் தேவன் அபூரணமான எதையும் அங்கீகரிக்கமுடியாது என்றாலும், நம் உள்ளுணர்வு மற்றும் சித்தத்தினுடையதாகவே நம் பரிபூரணம் இருக்கிறது, இவ்வாறு மீட்பர் மூலமாக அவரிடத்தில் அங்கீகாரம் பெறவேண்டும்.

யூதருடைய பிரதான ஆசாரியர் பணியில் அமர்த்தப்பட்டவேளையில், அவர் அபிஷேகம் பண்ணப்பட்ட நிழலான காட்சியை திரும்பிப் பார்க்கும்போது, அதை நிஜத்துடன் ஒப்பிடுகையில் மாபெரும் நிஜமான ஆசாரியர் யோர்தானில் அபிஷேகம் பண்ணப்பட்டார் என்பதை நாம் உணர்கிறோம். அங்கு கிறிஸ்துவின் கூட்டத்தாரது தலையாயிருக்கிற நம் கர்த்தராகிய இயேசு, பரிசுத்தஆவியை அளவில்லாமல் பெற்றுக்கொண்டார். பெந்தெகொஸ்தேவின்போது, நிஜமான அபிஷேக எண்ணெய் சபையின்மீது கீழிறங்கி வரத் துவங்கியது. நிழலில் பிரதான ஆசாரியனின் தலைமீது ஊற்றப்பட்ட எண்ணெய் அவரது அங்கிகளின் ஓரத்திற்கு வழிந்தோடியதுபோல, பரிசுத்தஆவியும் சபையின் தலையிலிருந்து கிறிஸ்துவின் சரீரமாகிய அபிஷேகம் பண்ணப்பட்ட கடைசி அங்கத்தினர் வரை இறங்கிவருகிறது – சங் 133:1–3.

**கிறிஸ்துவின் முழு கூட்டத்தாரும் அபிஷேகம் பண்ணப்பட்டனர்**

இந்த அபிஷேகத்தை பிதாவிடமிருந்து நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நாம் பெறுகிறோம். ‘‘சகலமும் பிதாவினுடையதாயிருக்கிறது, குமாரன் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது’’(1கொரி8:6). பிதாவானவர், குமாரன் மீது பரிசுத்தஆவியை வழங்கி அதை அவருடைய சரீரத்தின்மீது பொழியும்படி அவருக்கு அங்கீகாரம் கொடுத்தார். பரிசுத்தஆவி அருளப்படுதல், முழுசரீரத்திற்கான அபிஷேகமாக இருக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் பிதா தலையை அங்கீகரித்தபொழுது, சரீரத்தையும் அங்கீகரித்தார். சபையின் கறைகளை மூடுவதற்கு கிறிஸ்து தம் புண்ணியத்தை சுமத்தியபோது, நம்மை பிதா ஏற்றுக்கொள்ளும்படி அவர் செய்தார். இந்த ஏற்றுக்கொள்ளுதல் பெந்தெகொஸ்தேவில் அப்போஸ்தலர்கள் மீது வந்த அக்கினிமயமான நாவுகள் போன்றவற்றால் வெளிப்புறமாக வெளிப்படுத்தப்பட்டது. ஆயினும் இந்த வெளிப்புற வெளிப்படுத்துதல் மிக முக்கியமான காரியமாக ஒருபோதும் இருக்கவில்லை. அப்போஸ்தலர்கள் தெய்வீக வல்லமையின் எந்த விசேஷித்த வெளிப்படுத்தலும் இல்லாமல் பரிசுத்தஆவியை பெற்றுக்கொள்ளலாம்.

பெந்தெகொஸ்தேவில் இறங்கின அக்கினிமயமான நாவுகள், நம் கர்த்தருடைய ஞானஸ்நானத்தில் அவர்மீது வந்து ஒளிர்ந்த புறாவைப்போல, கண்களுக்கு தொடர்ச்சியாக காணப்படவில்லை. புறா மற்றும் ஒளிச்சுடர் ஆகிய இரண்டும், வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதமும் வல்லமையும் வந்திருந்தது என்பதைப் பார்க்கின்றவர்களை நம்ப வைக்கும்

நோக்கத்திற்கான வெளிப்புற பிரதிநிதித்துவங்களாக மாத்திரமே இருந்தன.

அபிஷேகம் பண்ணப்பட்ட கூட்டத்திற்குள், மனம்மாறிய முதல் புறஜாதியானாகிய கொர்நேலியு ஏற்றுக் கொள்ளப்பட்டபோது, அங்கு இயேசுவின் பின்னடியார்களுக்கு பரிசுத்தஆவி கொடுக்கப்பட்டிருந்தது என்ற உண்மையின் மற்றொரு வெளிப்படுத்துதல் இருந்தது. எனவே எந்த ஒரு உண்மைக்கும் அநேக வெளிப்பாடுகள் இருக்கக்கூடும். இப்போதும்கூட தேவன் பரிசுத்தஆவியை வழங்கியிருந்ததை காண்பிப்பதற்கான ஒரு வெளிப்பாடு கொடுக்கப்படலாம். ஆனால் அப்படிச்செய்வதனால் பரிசுத்தஆவி ஏற்கனவே அங்கு இருந்தது என்ற உண்மையை சுட்டிக்காட்ட மாத்திரமே செய்வார்.பெந்தெகொஸ்தேவில் சபை பெற்றுக்கொண்டஅபிஷேகம், நம் கர்த்தரின் அடிச்சுவடுகளில் அவரைப் பின்பற்றுவதற்கு அர்ப்பணிக்கப்பபட்டவர்களுக்கான தெய்வீக ஒப்புதலாக, தெய்வீக அங்கீகாரமாக இருந்தது. இவ்வாறு ஒரு சபை இருக்கவேண்டும் என்ற உண்மையின் வெளிப்புற செயல்விளக்கத்தை தேவன் கொடுத்தார்.

பெந்தெகொஸ்தே நாளிலிருந்து துவங்கி, இதே சுவிசேஷ அழைப்பு உலகம் முழுவதிலும், அதாவது தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்தில் உள்ள யாவருக்கும் சென்றிருக்கிறது(**அப்2:39**). அந்த அழைப்பின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்ட கூட்டத்துக்குள் வருகிறார்கள். நாம் கிறிஸ்துவுக்குள் வரும்போது, இந்த அபிஷேகத்திற்குள் வருகிறோம். நாம் இயேசுவின் சரீரத்திற்குள் வரவில்லை, மாறாக அபிஷேகம் பண்ணப்பட்ட (தலை மற்றும் சரீரமாகிய) கிறிஸ்துவின் இந்த அடையாளமான சரீரத்திற்குள் வருகிறோம். நாம் தேவனுடைய சுதந்தரவாளிகளாக, நம் கர்த்தராகிய இயேசுவின் உடன் சுதந்திரவாளிகளாக இருக்கிற இந்த நிலைமைக்கு நுழைகிறோம். இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் இந்த அபிஷேகம் சபையில் தொடர்ந்து இருந்துவருகிறது. நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, அது உங்களில் தொடர்கிறது. இந்த அபிஷேகத்திற்குள் ஒருபோதும் வராதவர்கள் சபையாக ஒருபோதும் இருக்கமாட்டார்கள்.

**அபிஷேகமும் ஜெனிப்பிக்கப்படுதலும்**

நாம் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை எப்படி அறிந்துகொள்வது என்பது காரியத்தின் மற்றொரு பகுதியாயுள்ளது. பெந்தெகொஸ்தேவில் சபை துவங்கினபோது, இந்த அபிஷேகத்தை விவரித்துக் காண்பித்த வெளிப்புற அடையாளங்கள் – அதாவது ஆவியின் வரங்கள், அந்நிய பாஷை பேசும் வரங்கள் போன்றவை அங்கு இருந்தன. அவைகள் வெறுமனே வெளிப்புற வரங்களாயிருந்தன. மேலும் இவைகள் ஓசையிடுகிற கைத்தாளம் போலவும், சத்தமிடுகிற வெண்கலம் போலவும் இருக்கும் என்று அப்போஸ்தலர் நமக்குக் கூறுகிறார்(**1கொரிந் 13:1–3**). இந்த வரங்களைப் பெற்றவர்கள் வெறுமனே வெளிப்புறமானவழியில், முறையான வழியில் தேவனுடனான உறவுக்குள் வந்திருக்கலாம். ஆவிக்குரிய காரியங்களில் உண்மையான முன்னேற்றத்தை ஏற்படுத்தாதவர்களாகவும் இருக்கலாம்.

இந்த அபிஷேகம் பண்ணப்பட்ட கூட்டத்திற்குள் நாம் வந்தபிறகு, இவ்வாறு அபிஷேகம் பண்ணப்பட்ட வகுப்பாராக நம்மைப்பற்றி பேசவும் சிந்திக்கவும் ஆரம்பித்ததில் இருந்து, அங்கு நாம் உண்மையாகவே இந்த வகுப்புக்குள் நுழைந்திருக்கிறோம் என்ற வெளிப்பாடு படிப்படியாக வரும் என்பது தேவனுடைய ஏற்பாடாக இருப்பதாகக் காணப்படுகிறது. இந்த சான்று அந்நிய பாஷைகள் பேசுவது போன்றவைகளினால் இருக்காது. மாறாக, பரிசுத்தஆவியின் கனிகள் மற்றும் கிருபைகளின் – அதாவது,சாந்தம், பொறுமை, தயவு, நீடியபொறுமை, சகோதர சிநேகம், அன்பு ஆகிய ஆவியின் கனிகள் மற்றும் கிருபைகளின் தோற்றத்தினால் இருக்கும். கிறிஸ்துவின் ஆவியினால் நாம் மேலும் மேலும் செயல்படுகிறவர்களாக ஆகியிருக்கிறோம் என்பதை அர்த்தப்படுத்துகிறதாக இந்த கனிகளின் வெளிப்பாடு காணப்படும்.

ஆனால் இங்கும்கூட நாம் இயற்கையான மனப்பான்மைக்கும், கிருபையில் வளர்வதனால் அடையப்பட்டதற்கும் இடையேயான வேறுபாட்டைக் காட்டவேண்டும். உதாரணத்திற்கு அதிக அளவு பொறுமையுடையோர் இருக்கிறார்கள், உண்மையில் அவர்கள் அதிகமான சோம்பேறிகளாக இருக்கிறார்கள். எனவே அவர்களின் பொறுமை ஆவியின் கனியாக இல்லை. இயற்கையான குணங்களையும், அடையப்பெற்ற கிருபைகளையும் வேறுபடுத்திக் காண்பிக்க, அந்த நபரின் இயற்கையான மனப்பான்மையை, அவர் கிருபையிலும் பரிசுத்தஆவியின் கனிகளிலும் அவர் வளர்ந்த வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

ஆவியின் அபிஷேகம் ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதலைப்போல முற்றிலும் அதே போன்றதல்ல. அபிஷேகமானது மேசியாவின் இராஜ்யத்தில் ஒரு விசேஷ வேலைக்காக அழைக்கப்பட்ட ஒரு விசேஷ வகுப்பாரின் ஒரு அங்கத்தினராக அங்கீகரிக்கப்படுவதோடு மாத்திரம் தொடர்புடையதாயுள்ளது. நாம் கிறிஸ்து மூலமாக தேவனோடு தொடர்புடையவர்களாக மாறினபோது நாம் அபிஷேகம் பண்ணப்பட்ட கூட்டத்தின் அங்கத்தினரானோம். ஆனால் அபிஷேகம் பண்ணப்படுதல் ஒட்டுமொத்தமாக முழு சபையை குறிப்பிடுகிற அதே சமயத்தில், பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதல் ஒரு தனிப்பட்ட காரியமாயுள்ளது. நாம் சத்திய வார்த்தையினாலும் சத்திய வார்த்தை மூலமாகவும் பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்படுகிறோம் என்பதை பல்வேறு வழிகளில் வேத வசனங்கள் நமக்கு விவரிக்கின்றன.

**சத்திய வார்த்தையின் மூலம் பரிசுத்தமாகுதல்**

வேறு வார்த்தையில் கூறுவோமானால், சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாமல் ஒருவரும் பரிசுத்தஆவியைப் பெறமுடியாது. இதற்கு ஒரு விளக்கமாக, அதிகமாக ஜெபித்த, தாராளமாக தான தர்மங்கள் செய்த கொர்நேலியு ஒரு நல்ல மனிதனாக இருந்தார். இருப்பினும் இவையெல்லாம் அவருக்கு பரிசுத்தஆவியைத் தரவில்லை. ஆனால் ஏற்ற சமயம்

வந்தபோது, அதாவது யூதர்களுக்கான 70 வார தயவு முடிவுக்கு வந்தபோது, தேவதூதன் கொர்னேலியுவினிடத்தில் வந்து, பேதுருவை அவரது வீட்டிற்கு அழைப்பிக்கும்படியும், அவரால் சொல்லப்படும் வார்த்தைகளை கேட்கும்படிக்கும் அவரிடத்தில் அறிவுறுத்தினார்(அப்10: 22). வார்த்தைகள் அத்தியாவசியமாய் இருந்தன.

கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களாக ஆவதற்காக, நம் தரப்பிலான புத்திக்கூர்மையுள்ள செயல்பாடு அங்கு இருக்கவேண்டும். அது ஏதோ ஒரு செப்படி வித்தையைப்போல் இருப்பதல்ல. எனவே சுபாவப்படி என்னதான் உயர்ந்தவராக இருந்தாலும் எந்த ஒரு புறஜாதியானும் சபை வகுப்பாராக இருக்கமுடியாது என்பதை நாம் அறிவோம். நாகரீகமடைந்த ஜனங்களுக்கும் இதுவே உண்மையாய் இருக்கிறது. அபிஷேகம் பண்ணப்பட்ட கூட்டத்தினராக இருக்க வேண்டுமானால் எவரும் கிறிஸ்துவின் மூலமாக தேவனோடு உறவுக்குள் வருகிற அறிவின் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கவேண்டும். இந்தத் தகவலை எவரேனும் பெற்றிருக்கவில்லை என்றால் அவர் சபை வகுப்பைச் சார்ந்தவராக இருக்கமுடியாது.

தேவனுடைய வார்த்தையாய் இருக்கிற சுவிசேஷசெய்தியே, ஜனங்களை தேவனுடனான உறவுக்குள் கொண்டுவரும். எனவே பரிசுத்தஆவியை பெறப்போகும் எவரும், முதலில் சத்தியத்தின் அறிவைப் பெறவேண்டும். அதன்பிறகு இந்த சத்தியம் அவர்மீது செயல்படும். முதலாவது அவர் நீதிக்கான தனது நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். அடுத்து கிறிஸ்துவை தன் மீட்பராக ஏற்றுக்கொள்ளவேண்டும். அதன்பிறகு கிறிஸ்துவை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டபிறகு, அவர் முன்னோக்கிச்சென்று , நம் கர்த்தராகிய இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதற்கு தன்னையே அர்ப்பணிப்பு செய்யவேண்டும். இது தேவனுடைய சித்தமாக இருக்கிறது என்று வெறுமனே அவர் புரிந்துகொள்வாரானால் அவர் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பார். பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பார் என்று நாம் நம்புகிறோம். அதன்பிறகு அதுவரைக்கும் அவர் முறையான படிகளை எடுத்த காரணத்தினால், அவர் இன்னும் அதிகமான அறிவுரையைப் பெறுவது தேவ கட்டளையாக இருக்கும்.

**அபிஷேகத்தின் நோக்கம்**

இது எந்தஅளவு தானாகவே நடக்கும் என்று நாம் உறுதியாக அறியாதிருக்கலாம். ஒரு திறமையான மனிதன் தானாக இயங்கும் நிலைகளின்மீது பெருமளவில் செயல்படுவதுபோல, மாபெரும் சிருஷ்டிகர் சந்தேகத்திற்கு இடமின்றி வேலை செய்வதற்கு தானாக இயங்கும் நிலைகளையே கொண்டிருப்பார். மேலும், ஒரு அடி எடுப்பது ஒரு பலனுக்கு வழிநடத்தும், மற்றொரு அடி எடுப்பது அடுத்த பலனுக்கு வழிநடத்தும். தேவன் தாமாகவே செயல்படுகிற சில மாபெரும் கொள்கைகளை உடையவராய் இருக்கிறார். அதன்படி, கிறிஸ்துவின்கீழ் அவர் ஏற்றுக்கொண்ட அனைவரும் குறிப்பிட்ட ஆசீர்வாதங்களை தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொள்வார்கள். அந்த தனிப்பட்ட நபர் தேவையான அடிகளை எடுத்தவுடன், தன்னுடைய நிகழ்வுகளில் தெய்வீக ஆசீர்வாதமும் வழிகாட்டுதலும் இருப்பதை உணர்ந்துகொள்வார்.

அபிஷேகம் பண்ணப்பட்ட அனைவரும் சபையின் மாபெரும் தலையானவரின் சிந்தையைப் பெற்றிருக்கிறார்கள். எனவே நாம் தனிப்பட்ட விதத்திலும் ஒட்டுமொத்தமாகவும் கிறிஸ்துவில் நிலைத்திருக்கத் தேடவேண்டும். ஏனென்றால் அபிஷேகம் பண்ணப்பட்ட வகுப்பாருக்குள் நாம் வந்திருக்கிறதுபோல அந்த வகுப்பாரில் இருந்து வெளியே போவதற்கும் நமக்கு சாத்தியம் இருக்கிறது. கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதற்கு, புது சிருஷ்டிகளாக நாம் கிருபையிலும் அறிவிலும் அன்பிலும் வளரவேண்டும். ஏனென்றால் புது சிருஷ்டிகளாக நம்முடைய ஓட்டத்தின் முடிவுவரை நாம் உண்மையுள்ளோராய் இருப்போமானால், முதலாம் உயிர்த்தெழுதலில் பரிபூரணப்படுத்தப்பட்டு, நம் கர்த்தரும் இராஜாவுமாயிருப்பவரோடு சிங்காசனத்தில் அமருவோம் – வெளி 3:21.

-------------------

**R 5550**

## கெத்செமனேயின் வேதனை ஏன்?

## WHY GETHSEMANE'S AGONY?

**ஆதார வசனங்கள் : மாற்கு 14:32–42.**
**"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்"– மத்தேயு 26:41.**

இயேசுவின் மரணத்தை நினைவுகூறும் இராப்போஜனத்தை நிறுவின பிறகு, அவரும் அவருடைய சீஷர்களும் ஸ்தோத்திரப்பாடல் பாடினபின், நகரத்திற்கு வெளியேயுள்ள ஒலிவ மலைக்கு எதிராக சென்றார்கள். இதன் தொலைவு சுமார் ஒரு மைல் தூரம் இருக்கும்.கெத்செமனேக்குப் போகிற வழியில் அநேக முக்கியமான படிப்பினைகள் சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்டன. இவைகளைப் பரிசுத்த யோவானின் சுவிசேஷத்தில் 15 முதல் 17வரையிலான அதிகாரங்களில் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

கெத்செமனே எனும் வார்த்தையின் அர்த்தம் எண்ணெய் செக்கு ஆலையாகும். இவ்வார்த்தை மிகுந்த முக்கியத்துவமுள்ளது. யூதர்கள் ஒலிவ எண்ணெயை உணவிற்காகவும், வெளிச்சத்திற்காகவும் பயன்படுத்தினார்கள் என்பதை நாம் நினைவுகூருகையில், இயேசுவும் உலகத்திற்கு ஆகாரம் அளிப்பவராயும், வெளிச்சம் அளிப்பவராயுமிருந்து, இயேசுவின் ஆத்துமாவை நசுக்கிப்போட்ட அவரது சோதனை அனுபவங்களை, ஒலிவப்பழங்களை நசுக்கி எண்ணெய் பிரித்தெடுக்கும் தோட்டத்தில் அவர் பெற்றிருப்பது விசேஷித்த விதத்தில் பொருத்தமுடையது என்று நாம் காண்கின்றோம்.

கெத்செமனே என்பது மலர் தோட்டமல்ல, மாறாக, ஒலிவ மரத்தோட்டமாய் இருந்தது. இவ்விடம் என்று அனுமானிக்கப்படுகின்ற பகுதியானது, சிதைவடையாமல் இன்றும் கவனமாய்ப் பேணப்பட்டு வருகிறது, பிரான்சிஸ்கன் துறவிகளால்(Franciscan Monks) பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்தத் தோட்டத்தில் மிகப் பழமைவாய்ந்த சில ஒலிவமரங்களும், மிகவும் பழமை வாய்ந்த கர்வாலி மரம் ஒன்றும் காணப்படுகின்றது. தோட்டமானது இயேசுவினுடைய நண்பர்கள் சிலருக்குச் சொந்தமானதாகக் கருதப்படுகின்றது. மேலும் இயேசு கைதுசெய்யப்பட்டபோது ஏற்பட்ட சத்தம் காரணமாக, எழுந்து துப்பட்டியால் தன்னைப் போர்த்திக்கொண்டு வந்த வாலிபன், பரிசுத்த மாற்கு சுவிசேஷத்தினுடைய எழுத்தாளராகிய ஜான் மாற்கு ஆவார் என்றும் சில சாட்சியங்கள் மூலம் கூறப்படுகின்றது(மாற்கு 14:51,52).

**எச்சரித்தல்**

கெத்செமனேக்குப் போகிற வழியில், அவர்கள் மிகப்பெரிய நெருக்கடிக்குள் பிரவேசித்துக்கொண்டிருக்கிற உண்மையை இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் பதியவைக்க முற்பட்டார். அவர், ''மேய்ப்பனை வெட்டு அப்பொழுது ஆடுகள் சிதறிப்போம்'' என்ற தீர்க்கதரிசினத்தை அவர்களுக்கு மேற்கோளாகக் காண்பித்தார்(சகரியா13:7). இதன் காரணமாக அவர்கள் அனைவரும் சோர்வடைவார்கள் இடறுவார்கள், கலங்கிப்போய் விடுவார்கள் என்று தெளிவாய் அவர்களுக்குக் கூறினார். அவர்கள் எதிர்பார்த்திராத காரியங்கள் சம்பவிக்கும் என்று கூறினார்.

கர்த்தருக்கான தனது பக்தியில் முழு பற்றுறுதி உடையவராய் , பரிசுத்த பேதுரு இதை மறுத்தார், இது ஒருவேளை மற்றவர்களுடைய விஷயத்தில் உண்மையாய் இருந்தாலும் தன் விஷயத்தில் அது உண்மையாயிராது என்றும், போதகரை மறுதலிப்பதற்குப் பதிலாக, அவரோடுகூட மரிப்பதற்குத் தான் ஆயத்தமாய் உள்ளதாகவும் தெரிவித்தார். பரிசுத்த பேதுரு மாபெரும் அபாயத்தில் இருப்பதாக இயேசு இன்னும் வலியுறுத்தினார். பரிசுத்த பேதுரு தனது மாம்சத்தில் மிக அதிகமாய் நம்பிக்கை கொண்டவராகவும், தேவனை நோக்கிப்பார்க்காதவராகவும், சோதனைக்கு எதிராக ஜெபத்துடன் விழிப்பாயிராதவராயும் இருந்தார். இயேசு முன்வைத்த குற்றச்சாட்டை சீஷர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மறுத்தார்கள். அவர்கள் தாங்கள் உண்மையுள்ளவர்களாக இருப்பதாயும், மரிப்பதற்கு ஆயத்தமாக உள்ளதாகவும் தங்களைக் குறித்துக் கூறினார்கள். அவர்கள்மீது எந்தளவு கடுமையான சோதனைகள் வரவிருக்கின்றது என்பதை அறியாதிருந்தனர்.

அப்போது இருந்ததைப்போல், இன்றைக்கும் உள்ள இயேசுவின் பின்னடியார்கள் அனைவருக்கும் இதில் ஒரு படிப்பினை நிச்சயமாய் உள்ளது. நமது கடைசி மூச்சுவரையிலும் கர்த்தர் நிமித்தமாக உண்மைத்தன்மையோடு இருக்க வேண்டுமென்று முழு தீர்மானத்துடன் நமக்கு நாமே உணர்வது சரியே. ஜெயங்கொள்ளுதலுக்கு இத்தகைய உறுதி மிகவும் அவசியமே.அநேகரால் செய்யப்படுகின்ற தவறு என்னவெனில், சோதனைகளும் பரீட்சைகளும் எவ்வளவு கடினமாக இருந்தாலும் அதை உணர்ந்துகொள்ளாததும், தேவையின் ஒவ்வொரு வேளையிலும் பரலோக உதவியின் அவசியத்தை உணர்ந்துகொள்ளாததுமேயாகும். ''நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாய் இருக்கிறேன்'' என்றுஅப்போஸ்தலர் எழுதியிருக்கிறார்(2கொரிந்12:10). இதன்மூலம் அப்போஸ்தலர் குறிப்பிடுவது என்னவெனில், தான் கர்த்தருக்கு முழுக்க உண்மையாய் இருக்கும் அதேவேளையில், தான் தன்னுடைய சொந்த பலவீனங்களையும் இயலாமைகளையும் உணர்ந்துகொள்வதாகவும், ஆனால் பரம உதவியை தான் விசேஷமாய் சார்ந்திருக்கும்போது பலமடைவதாகவும், தான் விழித்திருந்து ஜெபம்பண்ணும்போது சோதனைகளுக்கு எதிராக முன்னெச்சரிக்கப்படுவதாகவும் கூறுகின்றார்.

இந்த யுகத்தின்முடிவில், இந்த சுவிசேஷ யுகத்தின் நிறைவு நாட்களில், கிறிஸ்துவின் சபைக்கு கெத்செமனே அனுபவங்கள் சந்தேகத்திற்கிடமின்றி கடந்துவரும். இந்த சோதனைகளிலும் பரீட்சைகளிலும் நிலைநின்று, ஜெயங்கொண்டோராக வெளிப்படுபவர்களின் கர்த்தரிடத்திலான விசுவாசம் மற்றும் நம்பிக்கையே பலமுள்ளதாய்க் காணப்படும். இவர்கள் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து, ஜெபம் பண்ணுகிறவர்களாக இருப்பார்கள். இப்படியாக அவைகளுக்கு எதிராய்ப் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு வரவிருக்கின்ற சோதனைகளைக்குறித்து நமது கர்த்தர் பரிசுத்தபேதுருவையும், மற்ற அப்போஸ்தலர்களையும் முன்னெச்சரித்ததுபோலவே நமக்கு சமீபமாயிருக்கிற மிக நெருக்கடியான சோதனைகளைக் குறித்து நம்மையும் முன்னெச்சரித்திருக்கிறார். இப்பாடத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அப்போஸ்தலர்களின் அனுபவங்களிலிருந்து நாம் அனுகூலம் அடைவோமாக.

**மரணத்திற்கேதுவான துக்கம்**

தோட்டத்தை வந்தடைந்தவுடன் இயேசு அப்போஸ்தலர்களில் எட்டுப்பேரை வாசலிலேயே நிறுத்திவிட்டு, இன்னும் சற்றுத் தொலைவில் நிழல்கள் உள்ள பகுதிக்கு, பேதுருவுடனும், யாக்கோபுடனும், யோவானுடனும் சென்றார். நடக்கப்போகின்ற ஏதோ ஒன்றிற்காகவும், இதைக்குறித்து இயேசுவினால் அறியப்பட்டிருந்த ஏதோ ஒன்றிற்கு எதிராக அவர்கள் அனைவரும் விழித்திருக்கவேண்டும். காவல்காக்கவேண்டும். ஆனால் இப்படி நடப்பது சாத்தியமற்றது என்றே அப்போஸ்தலர்களுக்குத் தோன்றியது. போதகரிடத்தில் அவர்களுக்கு அனுதாபம் இருந்தபோதிலும், மோசமான விளைவுகள் நேரிடவிருப்பதாக அவர் எதிர்பார்ப்பதை, அவர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

நடுராத்திரியாயிற்று, அவர்கள் நேரமே தூங்குவதை பழக்கப்படுத்தியிருந்தார்கள். அன்றைய நாளின் மாலைவேளையில் ஏற்பட்ட அழுத்தம் மற்றும் போதகர் கொடுத்திருந்த பலமான பாடங்கள், அவர்களுக்கு அரைத் தூக்கத்தை வருவித்தது. அவர்கள் விழித்திருந்து ஜெபம் பண்ணுவதற்குப் பதிலாக, தூங்கினார்கள். போதகருக்கு நெருக்கமாயிருந்த மூவரும் தூங்கினார்கள்.

பிதாவோடு தனிமையில் ஐக்கியங்கொள்ள விரும்பினவராக, இயேசு கல்லெறியும் தூரத்துக்கு அப்பால், மரங்களின் நிழலுக்குள் மறைவாகச் சென்றார். அவர்மீது வந்த வியாகுலத்தின் நிமித்தமாக, அவர் அவ்வப்போது மனித அனுதாபத்தை நாடினபோது, தமக்கு நெருக்கமாயிருந்தோரும்

எல்லாவற்றையும் மறந்து, தூக்கத்திலிருப்பதைக் கண்டார், ''ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை'' என்று தீர்க்கதரிசி சரியாகவே கூறியுள்ளார்(ஏசாயா **63:3)**.அவர் ஒருவராய் துயரம் எனும் திராட்சை ஆலையை தனியாக மிதித்தார்.

தமது அப்போஸ்தலர்களுக்குப் புத்திமதிகூறி, அவர்களில் சிலரைத் தோட்டத்தின் வாசலில் விட்டதுவரைக்கும், போதகர் தம்மைக் குறித்தும், சிலமணி நேரங்களில் நடக்கவிருப்பதாக எதிர்பார்க்கப்பட்ட முக்கியமான நிகழ்வுகள் குறித்தும் விசேஷமாய்ச் சிந்தனை செய்ததாக காணப்படவில்லை. அவர் தமது மூன்று அபிமான சீஷர்களை விட்டுச்செல்கையில், அவரது ஆத்துமாவில் சடுதியாக எழுந்த அழுத்தத்தின் பாரத்தை உணர்ந்தவராக, ''என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது – என்மீது வரவிருக்கின்ற ஆபத்துக்கள் வருமுன்னதாக, நான் இப்போதே மரித்துவிடுவேனோ என்ற உணர்வு எழுகிறது'' என்றார். அவர் ''மிகவும் கலங்கியிருந்ததாகவும், திகிலடைந்திருந்ததாகவும்'' நாம் வாசிக்கின்றோம். இங்கு இடம்பெற்றுள்ள கிரேக்கச் சொல்லானது, உச்ச அளவிலான கலக்கத்தையும், திகிலையும் குறிக்கின்றதாயிருந்து, தனிமையை, நண்பர் அற்ற நிலையை, ஏக்கத்தை அர்த்தப்படுத்துகின்றது.

**போதகருடைய துயரத்திற்கான காரணம்**

போதகர் தம்முடைய மரணம் நிகழவிருப்பதை முன்னறிந்தவராக, இதைக் குறித்து தம் சீஷர்களிடம் அவர் கூறியிருந்து, தாம் மரணத்திலிருந்து மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவேன் என்று அவர்களுக்கு நிச்சயமளித்திருந்தாலும், அவர் தம்முடைய மரணத்தை எதிர்பார்த்திருந்த மாதுயரத்தை நாம் எவ்வாறு விளக்குவது? அவரது பின்னடியார்களில் சிலருக்கு இல்லாத அளவுக்கும், பொதுவான ஜனங்களுக்கு இல்லாத அளவுக்கும், மரணத்தைக் குறித்த எண்ணமானது மீட்பருக்கு ஏன் இத்தனை பயத்தையளித்தது –

சிலுவையில் அறையப்படுவதற்கு நிகரான அல்லது அதற்கும் மேலான அனுபவங்களுள்ள மரணங்களுக்குள்ளாகப் பல நூறு இரத்தசாட்சிகள் கடந்துபோயிருக்கின்றனர். இவர்கள் இயேசுவுக்கு நிகரான கொடுமையான மரணங்களுக்குள் கடந்துசெல்கையில், மிகுந்த தைரியத்தையும், மனோதிடத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால்அந்த வேளை அல்லது பாத்திரம் தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும் என்று மிகவும் ஏக்கமாய் ஜெபம் பண்ணின இரட்சகருடைய இத்தகைய மனநிலையை நாம் எப்படி எடுத்துக்கொள்வது?

இந்தக் கேள்வியையும், இதற்கான சரியான பதிலையும் புரிந்துகொள்வதற்கு, மீதமுள்ள மனுக்குலத்திலிருந்து போதகர் எவ்வளவு வித்தியாசமானவர் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். உலகம் அனைத்தின் மீதும் மரணத்தீர்ப்பு உள்ளது , நாம் எப்போது மரிக்கப்போகிறோம் என்பது மட்டுமே கேள்வியாயுள்ளதை நாம் அனைவரும் அறிவோம். மரிக்கும் நிகழ்வானது, சிலமணி நேரங்களுக்கு அதிகபட்சமாய் நீடிக்கக்கூடியவை என்பதை நாம் அனைவரும் அறிவோம். மரணத்திலிருந்து தப்பிப்பதற்கான எந்த நம்பிக்கையும் நமக்கு இல்லை என்பது மாத்திரமல்லாமல், நாம் ஏற்கனவே பத்தில் ஒன்பது பங்கு மரித்தநிலையில் உள்ளதால், நம்முடைய அறிவார்ந்த திறன்களானது ஏறக்குறைய மரத்துப்போனதாகவே காணப்படுகிறது. மரணம் குறித்த விஷயத்தில் நாம் ஏறக்குறைய அலட்சியமானவர்களாகவும், கவனமற்றவர்களாகவும் மற்றும் இதற்கேற்ப கடுமையானவர்களாகவும் காணப்படுகிறோம்.

**உண்மையான தைரியத்தை வெளிப்படுத்துதல்**

திடீர் மரணத்தை சந்திப்பதில் பயப்படாமல் போர்வீரர்கள் யுத்தத்திற்கு பாய்ந்து செல்வதுண்டு மற்றும் இதைப்போன்று குதிரைகளும் செய்வதை காண்கிறோம். மரணத்தைக் கண்டு மிகவும் பயப்படுகிற நிலைமையிலும், தாங்கள் என்னசெய்கிறோம் என்று முழுக்கப் புரிந்துகொண்டு, கடமை மற்றும் அன்பின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து முன்னேறுகிறவர்கள்தான் மாபெரும் தைரியம் உடையவர்களாய் இருக்கின்றனர். இயேசு இப்படிப்பட்ட ஒரு போர்வீரராயிருந்தார். மற்றவர்கள் மரணம் என்பது என்னவென்று புரிந்திராததை, அவர் புரிந்திருந்தார். ஜீவனுடைய முக்கியத்துவம் மற்றும் மதிப்பு குறித்து மற்றவர்களால் உணர்ந்துகொள்ள முடியாததை, இயேசு உணர்ந்திருந்தார்.

இயேசு பரலோக மகிமையைத் துறந்தவராக, ஆவிக்குரிய தளத்தின் சுபாவத்தை விட்டுவிட்டு, மனித சுபாவத்தை எடுத்துக்கொண்டார். காரணம். மனிதன் பாவம் செய்ததன் நிமித்தமாக, தெய்வீக நோக்கம் மற்றும் ஏற்பாட்டின்படி இயேசு மனிதருக்கான மீட்கும் பொருளாக, அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் மரிக்க வேண்டியிருந்தது. இதுவே அவரைக்குறித்த பிதாவின் சித்தமாயிருந்தது. இந்த நோக்கத்திற்காகவே அவர் உலகிற்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளார். இந்த சிந்தையே, அவரது ஜீவியம் முழுவதையும் இயக்கியது. தேவனுடைய சித்தத்தைச் செய்வதிலும், மனுக்குலத்திற்கு ஊழியம்புரிவதிலும் அவர் தினந்தோறும் தம் ஜீவனை ஒப்புக்கொடுத்து வந்தார். இப்பொழுது அதன் மாபெரும் உச்சகட்டத்திற்கு வந்திருக்கிறார்.

கர்த்தருக்குக் கொடுத்திருக்கும் இப்பணியில் அவர் உண்மையுள்ளவராய் இருப்பாரானால், அவர் தெய்வீக வல்லமையினால் மரணத்தினின்று, அவர் அடைந்திருந்த முந்தைய நிலைக்கும் மேலான ஆவிக்குரிய தளத்திற்கும், நிலைமைக்கும் உயிர்த்தெழுப்பப்படுவார் என்று பரமபிதா வாக்களித்திருந்தார். இவ்விஷயத்தில் பிதாவின் உண்மையைக் குறித்தோ, பிதாவின் வல்லமையைக் குறித்தோ இயேசு ஐயம் கொள்ளவில்லை. ஆனால் பிதாவின் வாக்குத்தத்தமும் ஏற்பாடும் நிபந்தனையின் அடிப்படையிலேயே இருந்தது. நமது கர்த்தர் தம் பங்கை உண்மையுள்ளவராக நிறைவேற்றினால் மாத்திரமே அவர் உயர்நிலை ஜீவனுக்கான உயிர்த்தெழுதலைப் பெறமுடியும். பெரியளவிலோ அல்லது சிறிய அளவிலோ அவர் எவ்விதத்திலாவது பாவத்தில் ஈடுபடுவாரானால், ''சாகவே சாவாய்'' என்பதே பாவத்திற்கான தண்டனையாக அவர்மீது இருந்திருக்கும். மூன்றரை வருடங்களாக அவரது ஜீவியமானது, தேவனுக்கும் தெய்வீகச் சித்தத்தினை செய்வதற்குமென்று அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. அவர் தெய்வீக சித்தத்தை பரலோகப் பிதாவுக்குப் பிரியமான விதத்தில் , அப்படிப்பட்ட ஆவியில் முற்றும் முழுமையாகச் செய்திருந்தாரா? என்பதே கேள்வியாயிருந்தது. இதோடுகூட இனி அடுத்து சில மணிநேரங்களில் வருகின்ற அனுபவங்களை தம்மால் சரியான தைரியத்துடனும், சரியான விசுவாசத்துடனும், சரியான கீழ்ப்படிதலுடனும் கடந்துபோக முடியுமா, தாம்

கடந்துபோவோமா ? அல்லது தவறிப்போய், தம் அனைத்தையும் மரணத்தில் இழப்போமா ? என்ற கேள்விகள் அவருக்குள் எழுந்தன.

**போதகருக்கு பரிந்துபேசுபவர் இல்லை**

இப்படியாக அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க நாடுகின்ற நம்மிடமிருந்து, நம் போதகருடைய விஷயம் எவ்வளவு வேறுபட்டிருந்தது என்று நாம் காண்கின்றோம். நாம் இழப்பதற்கென எதுவுமில்லை, ஏனெனில் நம் சந்ததியினர் அனைவரும் மரணதண்டனைத் தீர்ப்பின்கீழ் உள்ளோம். இன்னுமாக, நம்முடைய பாவங்களுக்காக மரித்த தேவகுமாரன் அவரே என்றும், அவரது புண்ணியம் நம் அபூரணங்களாலான குறைகளை சரிக்கட்டுகிறது என்றும், ஏனெனில் நாமும் அவரில் நிலைத்திருந்து, பிதாவின் சித்தத்தைச் செய்ய விரும்புகிறோம் என்றும் இயேசுவின் பின்னடியார்களாக உணர்ந்துகொள்கிறோம்.

ஆனால் ஒருவேளை போதகர் தவறியிருந்தால், அதை நன்மையாக சரி செய்வதற்கென அவருக்கு ஒருவருமில்லை. அவருடைய தவறு என்பது நித்திய மரணத்தைக் குறிப்பதாகிவிடும். இன்னுமாக, விசேஷித்த உண்மைத்தன்மைக்காக, அவருக்காக தேவனால் வாக்களிக்கப்பட்டிருந்த அந்த விசேஷித்த ஆசீர்வாதங்கள் அனைத்தையும் இழப்பதையும் அது குறிப்பதாகிவிடும். மேசியாவின் இராஜ்யத்தின் வாயிலாக, மனுக்குலத்தைப் பாவம் மற்றும் மரணத்தின் நிலைமைகளினின்று தூக்கிவிடும் பிதாவின் வேலையைச்செய்யும் மாபெரும் சிலாக்கியத்தையும் இழப்பதைக் குறிப்பதாகிவிடும். சுருக்கமான வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், போதகருடைய தனிப்பட்ட நித்திய ஜீவனும், தூதர்கள் துரைத்தனங்கள் அதிகாரங்களுக்கும் மேலாக, பிதாவின் வலதுபாரிசத்தில் அவர் உயர்த்தப்படுவதும், அழியாமை, கனம் மகிமையாகிய அவருக்கானவைகள் யாவும் கெத்செமனேயின் அந்த இரவில், தராசில் நிறுத்தப்பட்டிருந்தது.

இவைகள் அனைத்தையும் போதகர் உணர்ந்தபோது, அவர் இந்த எண்ணங்களால் அமிழ்த்தப்பட்டதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. தமக்கு முன்புகாணப்படுகின்ற விசேஷித்த உபத்திரவங்களினின்றும் பயங்கரமான அனுபவங்களிலிருந்தும் தாம் தப்புவிக்கப்படவும், விலக்கப்படவும் தெய்வீகத் திட்டமானது வேறுவிதத்தில் நடந்தேறுவதற்கு வாய்ப்புள்ளதா என்று அவர் விரும்பினதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை ! அந்த அனுபவங்களின் பயங்கரமான பாகமானது,அவர் தேவதூஷணம் செய்தவராக,தேவனுக்கும் நீதிக்கும்சத்துருவாக,குற்றவாளியாக கையாளப்படுவதாகஇருந்தது.

**நம் கர்த்தர் எதற்கு திகிலடைந்தார் ?**

இக்காரியங்களானது சீரழிந்த, சீர்கேடான ஆத்துமாவிற்கு சிறியதாகவே காணப்படும். ஆனால் பிதாவினிடத்தில் அன்பு மற்றும் உண்மையினால் நிரம்பியுள்ள இருதயத்துக்கோ இத்தகைய அனுபவம் பயங்கரமானதாய்க் காணப்பட்டிருக்கும். அதாவது பிதாவின் சித்தத்தைச் செய்ய தம்முடைய அனைத்தையும் தியாகம் செய்தவர், தம்முடைய பரலோக மகிமையை, தம்முடைய பூமிக்குரிய நலன்களை தியாகம் செய்தவர், தேவனுக்கு எதிராக தேவதூஷணம் செய்ததாக கருதப்படுவதும், பாதகனாக குற்றவாளியாக சிலுவையில் அறையப்படுவதும் அவருக்கு காயத்தை வருவித்திருக்கும். ''பரிசுத்தரும் மாசில்லாதவரும் குற்றமற்றவரும் பாவிகளுக்கு விலகினவரும்...'' என்று யாரைக்குறித்து நாம் வாசிக்கிறோமோ, அந்த உயர்குணமுள்ளவரும் நேர்த்தியானவருமான இயேசுவுக்கு இவைகள் பயங்கரமான அனுபவங்களாகவே காணப்பட்டிருக்கும். இந்த அவமானத்தையே தம்மைவிட்டு கடந்துபோகும்படி இயேசு ஜெபம் பண்ணினார் என்று காணப்படுகின்றது. அவர் தாம் மரிக்கக்கூடாது என்று ஜெபம் பண்ணவில்லை, ஏனெனில் இந்த நோக்கத்திற்காகவே தாம் பூமியில் வந்திருப்பதாகவும், தம் மரணத்தின் வாயிலாகவே மனுக்குலத்தின் மரணதண்டனை அகற்றப்படமுடியும் என்றும் அறிந்திருந்தார்.அவர் தம் மரணத்தைக் குறித்து அடிக்கடி பேசியிருந்தார். மரணத்திலிருந்து தப்பிக்க வேண்டுமென்று அவர் ஒருமுறைகூட எண்ணினதில்லை. ''மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை'' என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். அந்த வேளையின் பிரத்யேகமானஅவமானத்தை கடந்துபோக , பிதா ஏதேனும் வழி வைத்திருப்பார் என்றே அவர் நம்பினார். ''ஆகிலும் என் சித்தப்படியல்ல, உம் சித்தப்படியே ஆகக்கடவது'' என்று போதகர் தன் மிகுந்த துயரவேளையிலும் ஜெபம் பண்ணினார்.

போதகருடைய கெத்செமனே அனுபவங்கள் பயத்துடன் இணைந்திருந்தது, ஆனால் மரித்துவிடுவோம் என்ற பயத்தினாலல்ல என்று பரிசுத்த பவுல் நமக்கு உறுதியளிக்கிறார். மரணத்திலேயே விடப்படுவோமோ என்ற பயமாக இருந்தது. முற்றும் முழுமையான கீழ்ப்படிதல் எனும் நிபந்தனையின்பேரில் பிதாவினால் வாக்களிக்கப்பட்டிருந்த மகிமையான உயிர்த்தெழுதலுக்குப் பாத்திரமாகக் கருதப்படாமல் போவது குறித்த பயமாக இருந்தது. ''அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று (உயிர்த்தெழுதல் மூலம்) இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு'' (எபிரேயர் 5:7). என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். அவர் மரணத்திலிருந்து இரட்சிக்கப்பட்டார், அதற்கும் மேலாக அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல் வாயிலாக இரட்சிக்கப்படுவார் என்ற நிச்சயம் பிதாவினால் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

**பரத்திலிருந்து பலப்படுத்தப்பட்டார்**

தேவனிடமிருந்து ஒரு தேவதூதன் அவருக்குத் தோட்டத்தில் தோன்றி அவரைப் பலப்படுத்தினார் என்ற வார்த்தைகளுக்கான விளக்கம் இதுவே. இயேசு அந்நிமிடம்வரை உண்மையாய் இருந்திருக்கின்றார் என்றும், சீக்கிரத்தில் வரவிருக்கின்ற சோதனைவேளையில், தெய்வீக ஆசீர் அவரோடே இருக்கும் என்றும் பிதாவிடத்திலிருந்து வாக்குறுதியை, தூதன் இயேசுவுக்குக் கொடுத்தார். அத்தருணத்திலிருந்து அனைத்து பயங்களும் வியாகுலங்களும் அகன்றன. பிதா இதுவரையிலும் தம்மை அங்கீகரித்துள்ளாரெனில், பிதாவின் ஆசீரும் புன்முறுவலும் தம்மோடுகூட வருமாயின், எதுவந்தாலும் அவரால் அனைத்தையும் சகிக்கமுடியும். மீதமுள்ள இராத்திரி வேளையிலும், பின்தொடர்ந்து வந்த நாளிலும், மிகவும் கடுமையான சூழ்நிலைகள் மத்தியில், இயேசு அமைதியிலும் அமைதியுள்ளவராகக் காணப்பட்டார். தமக்காக அழுதவர்களை அவர் ஆறுதல் படுத்தினார். தம்முடைய தாயாரை உண்மையுள்ள சீஷனாகிய பரிசுத்த யோவானிடம் ஒப்படைத்தார்.

போதகருடைய இந்த அனுபவங்கள், அவரது சீஷர்களின் அனுபவங்களில் மீண்டும் நிகழ்ந்ததை நாம் ஓரளவு காணலாம். அவர்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றும், பிதா அவர்களை நேசிக்கிறார் என்றும், அவரது கிருபை அவர்களுக்குப் போதுமானது என்றும், மீட்பருடைய நீதியின் வஸ்திரமானது அவர்களை மூடுகின்றது என்றும் அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டிருக்கையில், இம்மாதிரி சூழ்நிலைகளில் மரண திகிலின் மத்தியிலும் அவர்களால் தைரியமாக இருக்கமுடியும். ''ஜனங்களில் ஒருவனும் அவரோடு இருக்கவில்லை'' என்ற போதகருடைய விஷயத்திலிருந்து நம்முடைய விஷயம் வேறுபட்டுள்ளது என்ற , போதகருக்கும் அவரது பின்னடியாருக்கும் இடையிலான ஒரு மாபெரும் வித்தியாசமானது நினைவில் கொள்ளப்படவேண்டும். போதகர் நம்மோடுகூட இருக்கின்றார், ''நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை'' என்று கூறுகின்றார். இதோடுகூட, கிறிஸ்துவின் சகோதரர்களுடைய ஆவியின் ஐக்கியமும் நமக்கு இருக்கிறது. நம்மோடுகூட விழித்திருந்து, நம்மோடுகூட ஜெபம் பண்ணுகிற சகோதரர்களின் உற்சாகப்படுத்தும் வார்த்தைகளானது, ஒவ்வொரு உபத்திரவ வேளையிலும் பலப்படுத்தும் ஆதாரமாயுள்ளன. தெய்வீக ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குகள் அனைத்திற்கும் நாம் அவருக்கு நன்றிசெலுத்தி, தேவன் தம் குமாரன் மூலமாக வழங்குகின்ற பலத்தில் பலப்பட்டு, நம்முடைய கெத்செமனேக்குள் முன்னேறிச் செல்வோமாக !

-------------------